விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 157 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 11 ஞாயிற்றுக்கிழமை (25.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




மணல் கடத்தல்

## சங்குப்பிட்டியில் 3 டிப்பர்கள் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற மூன்று டிப்பர்கள் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகாமையில் வைத்து இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 22ஆம் பக்கம் பார்க்க

## நல்லூரில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட உணவகத்தை மூட நடவடிக்கை எடுக்குக

தமிழ்ச் சைவப் பேரவை ஆளுநரிடம் மனு



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சூழலில் எந்தவொரு அனுமதியும் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ள பன்னாட்டு உணவகத்துக்கு எதிராகவும் அதனை மூடுவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும், சட்டவிரோத உணவகம் அமைக்கப்படுவது 22ஆம் பக்கம் பார்க்க

# எந்தவொரு சூழ்ச்சியாலும் அரசைக் கவிழ்க்க முடியாது

பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)



மூவின மக்களாலும் உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எந்தவொரு சூழ்ச்சியாலும், வதந்திச் செய்திகளாலும் கவிழ்க்க முடியாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

வல்வெட்டித்துறையில்

## மயங்கிவிழுந்த குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)

வல்வெட்டித்துறையில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

மாவடி சமரபாகுவைச் 23ஆம் பக்கம் பார்க்க

அடுத்தவருடம் அநுர அரசு

## துரத்தியடிக்கப்படும்

எதிர்க்கட்சி எம்.பி நளின் பண்டார

(கொழும்பு)

அடுத்த வருடம் அநுர அரசாங்கம் துரத்தியடிக்கப்படும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களிடம் 22ஆம் பக்கம் பார்க்க

- ஆலடி மாநாடு
- ஆச்சி அறிவுரை
- கவிதைக் கலசம்
- நல்வாழ்வுக்கான 4 படிகள்

இன்னும் பல அம்சங்களுடன்
சங்குநாதம் உள்ளே

## பூநகரியில் அரச காணியில் அத்துமீறி கடைகள் அமைப்பு

தடுக்கச் சென்ற உத்தியோகத்தருக்கு மிரட்டல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோதக் கடைகளை அகற்றச் சென்ற பூநகரிப் பிரதேச சபைச் செயலாளர் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்களின் 23ஆம் பக்கம் பார்க்க

## நிமோனியாக் காய்ச்சல் யாழில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் நிமோனியாக் காய்ச்சல் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் பலாலி தெற்கு, வசாவிளான் பகுதியைச் சேர்ந்த பா.கிட்டுணன் (வயது-75) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த சில 23ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் மன்றம் நல்லூர்

## மாதாந்தக் கலையரங்கு

காலம் : 25.05.2025
நேரம் : பி.ப .04.30 மணி
இடம் : இளங்கலைஞர் மன்றம், நல்லூர்

### நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- குழு நடனம் - இளங்கலைஞர் மன்ற மாணவர்கள், அணிசெய் கலைஞர்கள்
  நட்டுவாங்கம் – திருமதி. மதிவாணி விக்னராஜா
  பாட்டு – திரு.சிறி.சாருஜன்
  மிருதங்கம் – திரு.க.சிவகுமார்
  வயலின் – திரு.கு.சயந்தன்
  நெறியாள்கை – திருமதி.மதிவாணி விக்னராஜா



- குழு இசை - தீபம் இசைக் கல்லூரி மாணவர்கள்
  அணிசெய் கலைஞர்கள்
  வயலின் – திரு.கே. வேலதீபன்
  மிருதங்கம் – பிரம்மஸ்ரீ.வரதராசசர்மா ரமணசர்மா
  கெஞ்சிரா – சிரஞ்ஜீவி.ர.லயசர்மா
  நெறியாள்கை : திரு.எம்.எஸ்.பிரதீபன்
- இசையரங்கு - பாட்டு – ஸ்ரீமதி.சிவரஞ்சனி ரமணசர்மா
  அணிசெய் கலைஞர்கள்
  வயலின் – சிரஞ்ஜீவி.ரமணசர்மா லயசர்மா
  மிருதங்கம் – கராசுரலயபூபதி பிரம்மஸ்ரீ.வரதராசசர்மா ரமணசர்மா
  கஞ்சிரா – சிரஞ்ஜீவி, உமாசுதக்குருக்கள் பக்தவத்சலசர்மா
  கடம் – செல்வன். உதயகுமார் ஹிதுஷன்
  முகர்சிங் – சிரஞ்ஜீவி.ருமணசர்மா கானாமிர்தசர்மா



**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

நிர்வாக சபை,
இளங்கலைஞர் மன்றம் - நல்லூர்

(C-3033)

# நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
**077 138 7596, 071 999 9306, 021 222 9306**

(4377)

# விற்பனைக்கு

1. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும்
2. யாழ். பிறவுண் வீதியில் 6 ½ பரப்பும், 3 பரப்பும்
3. யாழ். கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்நாவலர் வீதி முகப்புடன் 12 பரப்புக் காணியும்5 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : **077 723 2535**

(C-3034)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 03.08.1947 மறைவு 23.05.2025

எமது பிரதேசசெயலகத்தின் சமுர்த்தி தலைமைப் பீடத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி.ஆனந்தஈஸ்வரன் தயாழினி** அவர்களின் பாசமிகு தாயார்

**அமரர் மாணிக்கவாசகர் பாறுபதி**

அவர்கள் 23.05.2025 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... **பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-3028)

# மரண அறிவித்தல்



## மாணிக்கவாசகர் செல்வலட்சுமி

வட்டு. தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் செல்வலட்சுமி அவர்கள் நேற்று சனிக்கிழமை (24.05.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - அமுதப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பார்வதிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் அவர்களின் அன்பு மனைவியும் திலீபன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் சங்கானை) அவர்களின் பாசமிகு தாயாரும் வக்ஷிதா அவர்களின் அன்பு மாமியாரும் அன்னலட்சுமி, செல்வராஜா (கனடா), காலஞ்சென்ற பாக்கியலட்சுமி மற்றும் மகாலிங்கம் (லண்டன்) மற்றும் பிறேமாவதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (25.05.2025) காலை 10 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உடுக்கியவளை பிள்ளையார் ஒழுங்கை,
வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்
077 85[illegible]0544

(C-3029)

# மரண அறிவித்தல்



## வீரகத்தி பொன்னுத்துரை

நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும் கலைமன்ற வீதி, புலோலி வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி பொன்னுத்துரை அவர்கள் (23.05.2025) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - தெய்வானை தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்ற நாகதம்பி மற்றும் அன்னபூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் தேவகி(ஆசிரியர் - யா/ புற்றளை ம.வித்தியாலயம்), வாசுகி(ஆசிரியர் - யா/சென் தோமஸ் றோ.க.த.க.பா), சாரங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குககாந்தன், அருட்செல்வம் ஆகியோரின் பாசமிகு மாமனும் பரமேஸ்வரி அவர்களின் அருமைச் சகோதரனும் கந்தசாமி, செல்லம்மா, நேசரத்தினம், நேசமணி, குமரேசு, மயில்வாகனம், புஸ்பலீலா, பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும் புஸ்பலதா, ரவிக்குமார், பிறேமலதா, கயல்விழி, இளங்கோ ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் ஆதிபன், ஆகீசன், ஆருத்ரா, தட்சகன் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அவறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலைமன்ற வீதி, புலோலி வடக்கு,
பருத்தித்துறை.

(1167) 076 754 5221

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வராணி ஆழ்வார்ப்பிள்ளை



இல.249, துர்க்கையம்மன் வீதி,
ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சி.

வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல.925, சிலிக்சென்டர், வட்டக்கச்சி இல. 249, துர்க்கையம்மன் வீதி, ஆனந்தபுரம் மேற்கு கிளிநொச்சியை வதி விடமாகவும் கொண்ட செல்வராணி ஆழ்வார்ப்பிள்ளை அவர்கள் 23.05.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் ஆழ்வார்ப்பிள்ளையின் அன்பு மனைவியும் அமரர்களான சுவாமி நாதர் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கிட்டினபிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் மதனி மீனாட்சிசுந்தரம், செல்லரதி ஸ்ரீதரன், கந்தவேள், அமரர் சரவணபவா, ஆழ்வார்ப்பிள்ளை பங்கயற் செல்வி, அமரர் ஆழிவேள், உதயச்செல்வி இந்திரஜித் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ந.மீனாட்சிசுந்தரம், வீ.ஸ்ரீதரன், க.ஸ்ரீநந்தினி, ஆ.சிவபாக்கியம், வெ.இந்திரஜித் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அமரர் கமலாம்பிகை, அமரர் சோமாஸ்கந்தர், அமரர் இராஜேஸ்வரி, அமரர் சந்திரவதனா மற்றும் சு.மகேந்திரன், சு.இந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மீ.பவித்திரா, மீ.சரண்யன், மீ.சர்வயன், ஸ்ரீ.நிலாவரசி, ஸ்ரீ.நிலவன், ஸ்ரீ.நிலாவினி, இ.ஹாஷ்வி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் சஞ்சுகா, க.சஞ்சீவன், நி.தமிழரசி, தி.சரணியா, ஆ.பிரவீனா, ஆ.ரிமோசாயன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் தி.அதிதியின் பூட்டியும் அமரர் ஆறுமுகம், அமரர் அன்னலட்சுமி, கி.வைத்திலிங்கம் சோதிமணி, கி.சின்னராசா, அமரர் சின்னத்தம்பி, இராஜேஸ்வரி, புஸ்பராணி, சத்தியவதனி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் அமரர் ராமசாமி, பூபதி அம்மா, செல்வநாயகி மயில்வாகனம் செல்வராணி, இராஜேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.05.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் இல.249, துர்க்கையம்மன் வீதி, ஆனந்தபுரம் மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் -
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய குத்துச் சண்டை சம்பியன்ஷிப்

# இலங்கைக்கு முதலாவது பதக்கத்தை வென்று கொடுத்தார் ஹிருணி



கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றுவரும் ஆசிய 22 வயதுக்குட்பட்ட மற்றும் இளையோர் குத்துச்சண்டை சம்பியன்ஷிப்பில், இலங்கைக்கான முதலாவது வெள்ளிப் பதக்கத்தை ஹிருணி விஜேசிங்க வென்று கொடுத்தார்.

இளையோர் பெண்களுக்கான 63 கிலோ கிராம் எடைப் பிரிவில் கசகஸ்தான் வீராங்கனை குடெய் ஜெனோவா அலினாவின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் முதல் சுற்றில் 2ஆவது நிமிடத்தில் ஹிருணி விஜேசிங்க போட்டியிலிருந்து வெளியேறினார்.

முதல் சுற்றில் அலினாவின் எதிர்பாராத கடுமையான தாக்குதலில் ஹிருணி நிலைகுலைந்து போனதை அடுத்து மத்தியஸ்தர் போட்டியை நிறுத்தினார்.

இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்தபோதிலும் சர்வதேச அரங்கில் வெள்ளிப் பதக்கம் வென்றதையிட்டு திருப்தி அடைவதாக ஹிருணி தெரிவித்தார்.

# ஓய்வை அறிவித்த இலங்கை கிரிக்கெட் வீரர் மத்தியூஸ்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அஞ்செலோ மத்தியூஸ் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியுடன், அவர் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஆரம்பித்த அவர், இதுவரை 118 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8,167 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

அவற்றில் 16 சதங்களும் 45 அரைசதங்களும் அடங்கும்.

அத்துடன் 118 டெஸ்ட் போட்டிகளில் பந்துவீசியுள்ள அஞ்செலோ மத்தியூஸ் 33 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-3)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
--
1956
--
04
--
23



மறைவு
--
2025
--
05
--
24

## அமரர். சரவணமுத்து சந்திரராசா

(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் - தென்மராட்சிக் கல்வி வலயம்)

சாவகச்சேரி பெரிய மாவடியைப் பிறப்பிடமாகவும் அல்லாரை தெற்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சந்திரராசா அவர்கள் 24.05.2025 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து- இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் பரமேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராசா மற்றும் சிவராசா, காலஞ்சென்ற வரதராசா மற்றும் அற்புதராணி, கௌரீசன் (ஆசிரியர்-கிளி/பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சகுந்தலாதேவி, அமரர் நாகேஸ்வரன் மற்றும் சிவலதா(ஆசிரியர்-கிளி/பளை R.C.T.M.S)ஜெயக்குமார், ஜெயலலிதா, பாலகுமார், லிபன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யதிசன்(முகாமைத்துவ உதவியாளர், நீதவான் நீதிமன்றம்-மட்டக்களப்பு), யபோசன்(ஆசிரியர்-சிலாபம் வடிவாம்பிகை இந்துக் கல்லூரி), சுஹேசினி (பொறியியலாளர்-கொழும்பு), காருசன்(ஆசிரிய பயிலுநர்- மட்டக்களப்பு கல்வியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கஜானன், சாம்பவி, தர்மிகா, பிறையினி ஆகியோரின் பெரியப்பாவும், சாளினி, நாகபூசனி, செவ்வேள், மயூரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 25.05.2025 இன்று ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகை களுக்காக முற்பகல் 10.00 மணியளவில் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

(சி-3031)

தகவல்- குடும்பத்தினர்
077 365 6907

# சிலப்பதிகார விழா 3 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் புலமை ஒலி- 2025 சிலப்பதி கார விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கரவெட்டி துன்னாலை அல் லையம்பதி வடிவேலர் மண்டபத்தி லுள்ள திருமதி. வசந்தகுமாரி கதிர்வேற் பிள்ளை அரங்கில் இடம்பெறவுள் ளது.

யாழ்ப்பாணம் அரச அதிபர் ம. பிர தீபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்பு நடனத்தினை இ.வைஷாலி, இ.கவினயா, கு. அஸ் ணவி, பி. பிரவீனா, ஆகியோரும் மங் கல விளக்கேற்றலை சிவகுமாரசாமி கல்யாணி தம்பதிகள் மற்றும் அருண் பிரசாந்த் உஷாந்திதம்பதிகள் ஆகியோ ரும் கடவுள் வாழ்த்தினை யா/ ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சி. பிரதீபனும் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் வரவேற்புரையினை வே. சுரேஸ்வரனும், தொடக்கவுரை யினை வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தனும், கௌரவிப் புரையினை மன்னார் வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. பூபால சிங்கமும், நிறைவு ரையினை அகில இலங்கை இளங்கோ கழக ஆலோசகர் த. சிவலிங்கமும் நன்றியுரையினை செல்வன் க. பிரசாந் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் சி. கிருஷ்ணா கரனின் நெறியாள்கையில் இளங்கோ கழக இளைஞர் அணியினர் வழங்கும் "தமிழ் அமுதம்" இசை விருந்து, "குற்றக் கூண்டில் சிலப்பதிகார தலைவியர்" என்ற தொனிப்பொருளில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் நடுவராகப் பங்கு கொள்ளும் வழக்காடு மண்டபம் என்பன இடம்பெறவுள்ளன. இந் நிகழ்வில் சமூகப்பணிக்கான உயர் விருதினை வடிவேலு சந்திரசேகரம் அவர்களும் சிலம்பிசை விருதினை த.குருபரன், க.வாணிமுகுந்தன் ஆகியோரும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். ( நி-3)

# வவுனியா மாவட்டத்தில் 1,116 ஏக்கரில் தென்னைச் செய்கை

(வவுனியா)

நாட்டின் தேங்காய் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உள்ளூரில் தேங்காய் உற்பத்தி செய்யும் நோக்கில் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட வடக்கு தெங்கு முக்கோண வலயத் திட்டத்தின் கீழ், 2025-2026 ஆம் ஆண்டுகளில் 40,000 ஏக்கர் தென்னைகளைப் பயிரிட எதிர் பார்க்கப்படுவதாக தென்னை அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு வவுனியா மாவட்டத்தில் 1,116 ஏக்கர் பரப்பளவில் 107 116 தென்னை மரங் களை நடுவதற்கான பணிகள் தொடங் கப்பட்டுள்ளன என்று தென்னை அபிவி ருத்தி சபையின் வவுனியா பிராந்திய பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் வீட்டுத் தோட்டத் தென்னை சாகுபடித் திட்டத்தின் கீழ், எதிர்காலத்தில் 71,492 தென்னங்கன்றுகள் பயிரிடப் படும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வீட்டுத் தோட்டத்தில் 15 தென்னங் கன்றுகளை நடுவதற்குத் தேவையான கன்றுகள் மற்றும் வழிமுறைகளை தென்னை அபிவிருத்திசபை வழங்கும். அத்துடன், முறையான தேங்காய் சாகுபடிக்காக 1/4 ஏக்கர் முதல் 50 ஏக்கர் வரையிலான பரப்பளவில் தேங்காய் பயிரிட உதவி வழங்கப்படுகிறது. அதன் படி, நீர் விநியோக அமைப்பை அமைக்க ஏக்கருக்கு 30,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

தென்னை சாகுபடியை பூச்சிகளி லிருந்து பாதுகாக்கவும், தேங்காய் விளைச்சலை மேம்படுத்தவும் விவசாயி களுக்கு ஆலோசனை சேவைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித் தார். இந்தத் திட்டம் தேசிய தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (8)

# இராசிபலன்

25.05.2025
வைகாசி 11, ஞாயிற்றுக்கிழமை
திரியோதசி பிற்பகல் 2.04மணிவரை.

அச்சுவினி முற்பகல் 9.22 மணிவரை
சுபநேரம் 8.52-1022 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

சந்திராஷ்டமம்.
அத்தம், சித்திரை

வளவன்




எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவுப் பலிதமுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், தொட்ட காரியங்கள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.




குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.




தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




பொதுவாழ்வில் புகழ் கூடும், இறைவழிபாட்டால் ஆர்வம் கூடும், செய்தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.




பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு மகத்துவம் தரும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.




கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.




கேளிக்கைகள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





**மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் நடந்து முடிந்தது.**



# நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுமா?

அபிமன்யு

வழமை போன்று குழப்பச் செயல்கள், எதுவும் நடைபெறாமல் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூருவதற்கு இம்முறை அனுமதி அளிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது.

புரிந்துணர்வு என்பது இதுவே. இந்த புரிந்துணர்வு அனைத்து விடயங்களிலும் கையாளப்படுமாக இருந்தால் நிச்சயம் இலங்கைக்குள் முரண்பாடின்றி அனைவரும் ஒரு நாட்டு மக்களாக வாழலாம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஒரு சிங்கள இளைஞர் பங்குபற்றி போரில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் முள்ளிவாய்க்கால் ஒரு புண்ணிய பூமி தெற்கு மக்கள் வடக்கிற்கு செல்ல மே~18 ஆம் திகதியே சிறந்த நாளென்று கூறியிருக்கிறார்.

கடந்த 16 வருடங்களுக்கு முன்னர் இந்த புண்ணிய பூமியில் நடந்த இறுதிப் போரில் 70 000 பேர் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும் 150 000 பேர் கொல்லப்பட்டதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கொடும் போரில் அப்பாவி பொது மக்களே அதிகம் கொல்லப்பட்டனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். உயிரிழந்தவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

அவர்களின் உறவுகள் இந்த இடத்தில் கூடி அஞ்சலி செலுத்துகிறார்கள். இது ஒரு உணர்வுபூர்வமான தருணம் எனப் பேசியிருந்தார். அத்துடன் அந்த இளைஞன் மே~18 எனப் பொறிக்கப்பட்டிருந்த கறுப்புப்பட்டியை தனது தலையில் அணிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சிங்கள இளைஞனின் வாக்குமூலத்தைக் கேட்கும் போது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. மாற்றம் என்பது இது அல்லவோ என நெஞ்சம் அங்கலாய்த்தது

இந்த மாற்றத்திற்காகவே தமிழினம் இதுவரை காத்திருந்தது.

இந்த இளைஞனுக்குள் ஏற்பட்ட மாற்றம் ஒட்டுமொத்த சிங்கள மக்களுக்குள்ளும் ஏற்பட வேண்டும் என்ற பேரவா ஈழத்தமிழினத்திடம் இருந்து கொண்டே இருக்கிறது.

கொடும் போரில் அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டதை, அவர்கள் பட்ட இன்னல்களைப் புரிந்துகொள்ளாமல் ஒட்டுமொத்த தமிழினத்தையும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தியது எந்த வகையிலும் அறமாகாது.

அத்துடன் இறந்த தமது உறவுகளை நினைவுகூருவதை தடுக்க நினைப்பது பாரிய மனித உரிமை மீறலாகும்.

தெற்கு மக்களின் மனங்களை காயப்படுத்தும் செயலில் தமிழினம் ஒருநாளும் செயற்ப்பட்டதில்லை. ஆயினும் வடக்கில் தமிழினம் தமது உறவுகளை நினைவுகூரும் உரிமை மறுப்பைத் தட்டிக்கேட்ட போது, அதை இனவாதமாக்கி தெற்கு மக்களிடம் தமிழினம் தொடர்பில் தவறான புரிதலை ஏற்படுத்தினர் தெற்கு இனவாத அரசியல்வாதிகள்.

இங்குதான் சிங்கள மக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். தெற்கில் பயங்கரவாதமாக பார்க்கப்படும் ஒரு விடயம். வடக்கில் உணர்வுபூர்வமானது. ஏனென்றால் மண் மீட்புப் போரில் ஈடுபட்ட இளைஞர்கள் ஈழத்து அன்னையர்களின் பிள்ளைகள்.

உயிரிழந்த தனது பிள்ளையை ஒரு தாய் எவ்வாறு நினைவு கூராமல் இருக்கமுடியும்.

மீண்டும் ஒரு போரை தமிழினத்தினால் எதிர்கொள்ள முடியாது. அந்தளவிற்கு போரின் தாக்கம் தமிழ்மக்களை வாட்டி வதைத்து விட்டது. தமிழினம் தனது பூர்வீக நிலத்தில் எந்தவித அத்துமீறல்களும் இன்றி நிம்மதியாக வாழ விரும்புகிறது.

இந்த நம்பிக்கையிலேயே தேசிய மக்கள் சக்தி அரசை ஆதரித்து தமிழர் பகுதிகளில் வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தியது. அதற்கான பலனை அரசு தமிழ் மக்களுக்கு -ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

நிலை இவ்வாறு இருக்கையில் கடந்த மே~19 ஆம் திகதி இராணுவ வீரர்கள் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பங்கு பற்றியிருந்தார்.

அந் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, எமது நாடு பல தசாப்தங்களாக யுத்தத்தை எதிர்கொண்டது. அது எமது மக்களுக்குப் பல அழிவுகளை ஏற்படுத்தி விட்டது.

இது யுத்த நினைவு தினம் மாத்திரம் அல்ல. அனைவரும் ஒரே நாட்டு மக்களாக வாழ்வதற்கான உறுதிமொழி நாளாகும். அனைத்துப் பெற்றோருக்கும் தமது பிள்ளைகள் முக்கியம். அதனால் மீண்டும் ஒரு போர் ஏற்படாமல் தடுப்பது எமது பெரும் பொறுப்பாகும்.

எமது சந்ததி சண்டையிட்டது. கோபமும் குரோதமும் பரவியது. ஆனால் எமது அடுத்த சந்ததியினருக்கு யுத்தமற்ற, கோபமற்ற, யுகத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது எமது கடமை.

வடக்கிலும் தெற்கிலும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இனவாதத்தைத் தூண்டுகிறார்கள். நாட்டில் இன்னும் உண்மையான சமாதானம் நிலை நாட்டப்படவில்லை என்று கூறினார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறிய விடயம் வரவேற்கத்தக்கது. அதிகாரத்தைக் கைப்பற்ற இன்னமும் இனவாதத்தைத் தூண்டுகிறார்கள் என்பதற்குள் பாரிய அர்த்தங்கள் பொதிந்திருக்கின்றன.

எமது அடுத்த சந்ததிக்கு போரற்ற சமாதானம் மிக்க நாட்டைக் கையளிக்க வேண்டும் என அவர் கூறியிருப்பது வரவேற்கத்தக்கதாயினும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்ற பெரும் உண்மையை நாட்டு மக்களுக்குக் கூறியிருக்கிறார்.

மேற்குறித்த சமாதானம் தொடர்பில் சிந்திக்கும் பொழுது சில விடயங்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது.

அதாவது இன அழிப்பு எனும் சொற்பதத்தை எவரேனும் பயன்படுத்துவாராக இருந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தமிழ் மக்களின் மனங்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்டுத்தும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

தவிர, ஆனையிறவு உப்பின் பெயர் ரஜலுனு எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வந்தது பெரும் பேசுபொருளாக மாறியது.

உடன், ஆனையிறவு உப்பு எனப் பெயர் மாற்றப்படும் எனக் கூறப்பட்டிருந்தாலும் அது இன்று வரை நடைமுறைக்கு வரவில்லை என்பது வேதனைக்குரிய விடயம்.

வடக்கின் உப்பு நாட்டின் எப்பாகத்திற்கும் செல்லலாம். ஆயினும் அதன் வரலாற்றை மாற்றியமைப்பது எதிர்மறையான சிந்தனையையே ஏற்டுத்தும்.

மேலும் காணி சுவீகரிப்புத் தொடர்பில் தெளிவற்ற நிலை ஏற்பட்டிருப்பதும் தமிழ் மக்களின் எண்ண வோட்டத்தை மாற்றியமைக்க வாய்ப்புக்கள் அதிகம் எனலாம்.

ஜனாதிபதி கூறியது போல தமிழ் மக்கள் மீண்டும் ஒரு போரை விரும்பவில்லை. அவர்கள் திரிவுபடுத்தப்படாத தமது பூர்வீகத்தில் எந்தவித திணிப்புக்களோ, உருமாற்றங்களோ இல்லாமல் சுயமாக வாழ விரும்புகின்றனர். அதற்கு அனுமதித்தால் மாத்திரமே நாட்டில் நிரந்தர சமாதானம் மலர்ந்ததாய்ப் பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற என்ஜினியர் தயாபரன் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

பொதுச் சேவையில் மிகுந்த கருசனை கொண்ட அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.


தயாபரன்

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** நல்லூர் முருகன் ஆலயத்திற்கு அண்மையில அமையப்பெற்ற அசைவ உணவகம் இப்போது சைவ உணவகமாக மாற்றப்பட்டுள்ளதாக அறிந்தன் நல்ல விடயம்.

ஆனால், அப்படியான விடயங்களுக்கெல்லாம் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், மகஜர் கையளிப்பு என்பன நடந்தால் தான் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என்ற நிலைமை ஒருபோதும் இருக்கக் கூடாது.

உள்ளூராட்சி சபையில அனுமதி பெறாமல் எந்த நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவற்றை



## அனுமதியற்ற அசைவ உணவகத்தை சீல் வைக்கத் தவறியது ஏன்?

உடனடியாக சீல் வைத்து மூட வேணும். இதற்கான ஏற்பாடுகளை அந்தந்த உள்ளூராட்சி அமைப்பு கள் செய்ய வேணும். இதைவிட்டிட்டு எல்லாத்துக்கும் ஆர்ப்பாட்டம் ஊர்வலம் நடத்தினால் தான் நடவடிக்கை எடுப்பதென்றால், அது மிகப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

**கங்காணி:-** விதானையார் சொல்லுறது உண்மை தான். எங்கட உள்ளூர் மக்கள் நடத்துகின்ற சாப்பாட்டுக் கடையில ஒரு சின்னக் கீறல் இருந்தாலும் உடன, கடையை மூடு எண்டு உத்தரவு பிறப்பிக்கிற எங்கட சுகாதாரப் பரிசோதகர்கள் சர்வதேச உணவகங்கள் தொடர்பில மௌனமாக இருப்பது தான் ஏன் எண்டு புரியல்ல.

**மூப்பர்:-** கங்காணியார் சரியாகச் சொல்லியிருக்கிறார். எங்கட வடபுலத்தில ஏழைக் குடும்பங்கள் உணவுச் சாலைகள் அமைத்தால் அல்லது வீடுகளில சாப்பாடு சமைத்துக் கொடுத்தால் அதனை எங்கட சுகாதாரப் பிரிவினர் எப்படியும் தடை செய்து போடுவினம்.

ஆனால் பெரிய இடத்துச் சமாச்சாரம் எண்டால் அதனைப் பேசாமல் விட்டிடுவினம்.

**சாத்திரியார்:** மூப்பர் நீங்கள் இதைச் சொல்லுறியள். எங்கட சனங்கள் மிக்சர், மரவள்ளிப் பொரியல், கடலைப் பொரியல் என்பவற்றைச் செய்து அவற்றைப் பைக்கற் ஆக்கி விற்பனைக்கு விட்டால், என்ன? ஏது? எங்க? அனுமதி எடுத்ததோ? எண்டெல்லாம் கேள்வி கேட்டு சம்பந்தப்பட்ட உற்பத்தியை நிறுத்திறதில எங்கட சுகாதாரப் பரிசோதகர்கள் மிகவும் உறுதியாக இருப்பினம்.

ஆனால் அதே மிக்சர், மரவள்ளிப் பொரியல், கடலை என்பன தென்பகுதியில உற்பத்தி செய்யப்பட்டு அந்தப் பைக்கற்றுக்கள் இங்கு விற்பனைக்கு வந்தால், அதைப் பற்றி ஏன்? என்று கேட்க மாட்டினம்.

உண்மையாகச் சொல்லப் போனால் எங்கட, வடபுலத்து சுகாதாரப் பிரிவினரால சொந்த முயற்சிகள். குடிசைக் கைத்தொழில்கள் என்பவற்றைக் கைவிட்டுக் கந்தறுந்தவர்கள் கனபேர்.

எனினும் இந்த உண்மையை வெளியில சொல்வதற்கு ஒருத்தரும் இல்லை. இதுதான் உண்மை.

இதை நான் சொல்வதற்காக; மேற்படி விடயங்களை சுகாதாரப் பரிசோதகர்கள் பார்க்கவும் நடவடிக்கை எடுக்கவும் கூடாது. எண்டு யாரும் பொருள் கொள்ளல் ஆகாது.

நான் என்ன சொல்ல வாறன் எண்டால், குறித்த தொழில் முயற்சிகளில ஈடுபடுகிறவர்களை நாங்கள் ஊக்குவிக்க வேண்டும்.

அவர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

அதேநேரம் தென்பகுதியில இருந்து வரக்கூடிய சிற்றுண்டிகள் தொடர்பிலும் நாங்கள் சரியான நடவடிக்கை எடுக்க வேணும்.


**சிறாப்பர்:** அதெண்டால் உண்மை தான். நல்லூர் முருகனின் ஆலய சூழலில் அனுமதி பெறாமல் ஆரம்பிக்கப்பட்ட அசைவ உணவகம் தொடர்பில சுகாதாரப் பிரிவு நடவடிக்கை எடுக்காதது ஏன்? அவ்வாறானதொரு உணவகத்தை ஒரு தமிழ் மகன் ஆரம்பித்திருந்தால், அதை சுகாதாரத் துறை விட்டிருக்குமா? எண்ட கேள்விகளைப் பொது சனங்கள் கேட்கினம். இதற்கு உரிய பதிலை - விளக்கத்தை சுகாதாரப் பிரிவினர் மக்களுக்கு அறிக்கையிட வேணும்.

**கங்காணி:-** சரி... சரி... எங்கட யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில கொழும்பில இருந்து வந்த கணக்காய்வுத் துறையினர் பரிசோதனை நடத்தியதாகக் கேள்விப்பட்டன்.உண்மையோ.

கங்காணியார் கேட்ட கேள்விக்கு வாத்தியார் வைத்திலிங்கம் பதில் அளிக்க முற்படும் போது ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்யான சமாதானம் இலங்கையில் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டா வியாசரே?






ஈழத்தமிழர் வலி சொல்லும் டூரிஸ்ட் பமிலி படம் பார்த்து விட்டீர்களா?

**வியாசரே, வேலியே பயிரை மேய்ந் தால்...?**

செல்வம்-பருத்தித்துறை

இது கரிகாலம். அதாவது வேலியே வேலியை மேயும் காலம். இந்தக் காலத்தில் வேலி பயிரை மேய்வது ஆச்சரியமான விடயம் அல்ல.

அண்மையில் ஒரு காணொளி பார்த்தேன். ஐந்து வயதுக் குழந்தையை பாலியல் பலாத்காரம் செய்த கொடியவனுக்கு வீதியில் பொதுமக்கள் முன்னிலையில் வைத்து மரண தண்டனை வழங்கப்படுகிறது. அதன் பின் அவனது உடல் பொது வெளியில் கட்டித் தூக்கப்பட்டது.

அதை அந்நாட்டு மக்கள் ஆமோதித் துள்ளனர். தண்டனைகள் கடுமையாக இருந்தால்தானே தவறுகள் நடக்காமல் இருக்கும்.

**16 வருடங்கள் ஆகியும் பொறுப்புக் கூறாத ராஜபக்ஷக்களை கனடா இன்றும் பொறுப்புக்கூறக் கேட்பது நியாயமா?**

சுதன்-குப்பிளான்

நாங்கள் தான் மோதகத்திற்குள் ஒழிந்த கொழுக்கட்டைகளை ஆதரித்தோமே. அதன் விளைவு கனடிய அதிகாரிகளை அழைத்து கண்டித்த போதும் "இனப்படுகொலை" எனும் பதத்தை எவர் பயன்படுத்தினாலும் அவர்கள் மீது சட்டம் பாயும் என்று அறிக்கை விட்ட போதும் உணர்ந்து கொண்டோமல்லவா?

பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை என்றொரு பழமொழியுண்டல்லவா? அது இதுதான் போலும்.

சுகம் வரும், ஆள் தப்பாது. அவ்வளவு தான்.

**ஈழத்தமிழர் வலி சொல்லும் டூரிஸ்ட் பமிலி படம் பார்த்து விட்டீர்களா?**

சிவம்-வதிரி

நீண்ட நாட்களுக்குப் பின்னர் ஒரு நல்ல திரைப்படம் பார்த்த திருப்தி. படத்தில் வரும் ஒவ்வொரு பாத்திரங்களும் எமது வாழ்வில் பரீட்சயமான பாத்திரங்களாக இருப்பது படத்திற்குள் எம்மை இணைத்து விடுகிறது.

ஒரு ஈழத்து குடும்பம் அகதியாக இந்தியா சென்று அங்கே அனைவரிற்கும் பிடித்த குடும்பமாக மாறுவதே கதை.

அதில் உயிரை வருடும் நிகழ்வுகளை இழையோட விட்டிருக்கிறார் இயக்குநர்.

வழமையாக ஈழத்துப் பேச்சு வழக்கை திரிவுபடுத்திப் பார்த்திருப்போம். இதில் எமது பேச்சு வழக்கை மிகவும் கவனமாக கையாண்ட விதம் பாராட்டத்தக்கது.

படத்தைப் பாருங்கள். உங்களுக்கு நிச்சயம் பிடிக்கும்.

**வியாசரே உங்களை நேரடியாக சந்தித்து பல கேள்விகள் கேட்க வேண்டியுள்ளது என்ன செய்யலாம்?**

மரிய ஆன்சலோ-உரும்பிராய்

ஆன்சலோ, உலகின் வல்லாதிக்க மன்னன் கிட்லரைப் பற்றிக் கேள்விபட்டிருப்பீர்.

அடடா கிட்லர் இப்படிப்பட்ட கொடூரனா என்று அவன் தொடர்பில் உங்கள் மனதில் ஒரு உருவத்தை கற்பனை செய்து விடுவீர்.

அதன்பின் கிட்லரைப்பார்தால் ஓ... இவனா அவனும் அவன் மீசையும் என்று உங்கள் கனவு உருவம் சிதைந்து விடுமல்லவா?

ஆதலால் உங்கள் கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்தினூடாக கேட்பதே எனக்கும் நல்லது. உமக்கும் நல்லது.


அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

0076 097 3126

என்ற இலக்கத்திற்கு

SMS, Whats App செய்யுங்கள்


**ஒரு தென்னை இருக்கிறது. அதன் அருகே தொட்டி நிறையத் தண்ணீர் இருக்கிறது. தேங்காய் தொட்டிக்குள் விழுந்தால் என்ன நடக்கும் வியாசரே?**

அபிர்ஷா-பொலிகண்டி

முதலில் தேங்காய் நனையும். வியாசரின் வரலாற்றிலேயே கேள்வியையும் கேட்டு அதற்கு பதிலையும் கூறிய முதல் ஆள் அபிர்ஷா மட்டுமே.

அவர் அன்பாய்க் கேட்டதற்கிணங்க அவரின் பதில் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

**மெய்யான சமாதானம் இலங்கையில் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டா வியாசரே?**

குமார்-முகமாலை

ஈழத் தமிழினம் இறுதி யுத்தத்தில் பட்ட துன்பத்தை உணர்ந்து அப்பாவிப் பொது மக்களின் நினைவாக கனடிய அரசு நினைவுத் தூபி அமைத்தது. அது தவறு என்று அரசு கனடிய தூதுவரை அழைத்து கண்டனம் தெரிவித்தது.

முள்ளிவாய்க்காலில் அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதை "இனப்படு கொலை", "இன அழிப்பு" என்ற பதத்தை பாவிக்கக்கூடாது என்று கட்டளை போடுகிறது.

தமிழர் பூமியில் விளையும் உப்புக்கு சிங்களப் பெயர் சூட்டி அழகு பார்க்கின்றது.

இவ்வாறு நிலை இருந்தால் மெய்யான சமாதானம் அல்ல பொய்யான சமாதானம் கூட மலராது தம்பி.

**அதிகாலையில் கண் விழித்ததும் பெண்கள் முதலில் செய்யும் வேலை என்ன வியாசரே?**

தவராஜன்-கொற்றாவத்தை

திருமணம் முடித்தவர்கள் தாலியைக் கண்களில் ஒத்தி விழித்துக் கொள்வார்கள்.

திருமணமாகாத கன்னிப் பெண்கள் தமது கைகள் இரண்டையும் கண்ணில் ஒத்தி கை ரேகையில் விழிப்பார்கள். ஆனால் இவை அந்தக் காலம்.

இந்தக் காலம் அதிகாலையில் கண் விழித்ததும் விடியாத முகப் புத்தகத்தில் (பேஸ்புக்கில்) அல்லவா விழித்துக் கொள்கிறார்கள். பிறகு வீடும் நாடும் விளங்குமா? சொல்லுங்கள்.

**மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்தவரை மன்னிக்கலாமா வியாசரே?**

லக்மன்-யாழ்ப்பாணம்

மன்னிக்க முடியாத குற்றம் என்று எதுவுமே இல்லை. அனைத்திற்கும் மனம் தான் மருந்தாகிறது.

இராப்போசனத்தில் தன் நண்பர்கள் அனைவரது கால்களையும் கழுவி பணி விடை செய்கிறார் பரமபிதா. அதில் ஒருவனோ வெறும் முப்பது வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்டு தேவமைந்தரைக் காட்டிக் கொடுக்கிறான். அப்போது அவனின் பாவத்தையும் சேர்த்தே சிலுவையை சுமந்தார் இயேசு.

**துரோகிகளையும் நண்பர்களையும் எவ்வாறு இனம் காண்பது வியாசரே?**

தவேந்து-வவுனியா

எதிரி ஒரு நாளும் நமக்குத் துரோகியாக மாட்டான் எனின் நம்முடன் கூட இருக்கும் நண்பனால் மாத்திரமே எமக்கு துரோகம் இழைக்க முடியும்.

அனைத்து நட்பும் இவ்வாறு இல்லை. ஆங்காங்கே சிலர் அப்படித்தான். ஆதலால் அவதானம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொக்கிஷக் கவிதை

# கூத்து!

1987 வெளிவந்த
“மல்லிகை கவிதைகள்”
நூலிலிருந்து...



கூத்தாடிகளே, விரைவா யாடுங்கள்
கூதல் போகக் குதித்து - வேர்த்துக்
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!
பார்த்த மக்கள் நீத்துப் போகார்!
பனியில், பட்டு மணலில் நிலவில்
ராத்திரி முழுதும் கூத்துப் பார்க்கும்
ரசிகர் இவர்கள் பெருமைப் படவே
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!
கட்டியக் காரன் பட்டயம் முடிக்க
எட்டிடத் தாளக் கட்டொடு, பாட்டும்.
முட்டி மோதிப் பெரும் அட்ட காசத்தொடும்
முக்கிய நாயகன் கொலுவொடு தோன்றிக்
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!
பாங்கியும் பட்டத் தரசியும் தோன்றி,
ஆங்கொரு சோலை அடைவதும், அரசர்,
மாங்கனிச் சுவையில் மயங்கி மல்லாந்து,
பாங்கியர் தயவால் பாவையைப் புணர்ந்தும்
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!
கூத்தாடி கள்நீர் குடிப்பதற்காகக்
குடங்கள் அத்தக் கொட்டகைப் பின்னால்
பார்த்திடும் ரசிகரும் அதிலே அள்ளிப்
பருகத் தராதீர்! குறை கிறை யில்லைக்..
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!
பொழுதும் புலரப் போகுது பாரீர்!
புலர்ந்தால்... ஜிகினாப் பொட்டுகள் அந்தோ! வெளுக்கப்
போகுது சாயம்! கண்டால்
விரையப் போகுது சனங்கள் வீடு!
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!
இருட்டு முடியும் முன்னே கூத்தை
எப்படி யேனும் நடத்திப் போடுக!
மருட்டு வேஷம் குலைந்து போனால்
மக்கள் கூட்டம் கலைந்து போகும்!
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!
போக்கிரித் தம்பான் தருமனுக் கென்றும்
பொண்டுக் கணபதி அருச்சுனன் என்றும்
மோக்கான் தவளையன் திரௌபதி யென்றும்
முழுவதும் காரிய பாகங்கள் விளங்கும்!
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!
விடிந்தால்... வேஷம் கலைந்தால் - உங்கள்
வெட்டிய ஒட்டிய வேலைகள் மழுங்கும்!
படிந்த பகலில், பக்கத் துற்றுப்
பார்த்தால்... நுங்கள் கலைமணம் நோகும்!
கூத்தாடிகளே விரைவா யாடுங்கள்!
குதித்துச் சதங்கைத் திமீத்துத் தா! தெய்
குலுங்கக் குலுங்கக் குலுங்கச் சிலம்பிக்
கூத்தாடிகளே! விரைவா யாடுங்கள்!.

நீலாவணன்


அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...
☑ அரசியல் ☑ இலக்கியம் ☑ கவிதை ☑ கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம் (இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.)
E-mail : valampurii@yahoo.com Whatsapp : 076 097 3126


## கவிதைக் களம்

# ‘ஆமை’ அர்த்தங்களின் அதிசயம்



அருகாமை இருக்கும் அன்பானோர் எமை விட்டு
அகலாமை ஏற்றமெனப் புரியாமல் பேசும்
அறியாமை மனிதனுக்கு வேண்டாமை நன்றே!
முயலாமை கொண்டு வரும் வெல்லாமை
இயலாமை இருப்பினும் தளராமை கொள்க
மொய்யாமை உழைப்பில் இருந்திடில் உயர்வாய்!
ஓராமை மனத்திடை உறையாமை பேணுக
இல்லாமை செல்வம் நிலையாமை நீங்கியே
பொல்லாமை கேட்காத வாழ்விங்கு வளரும்!
கல்லாமை விடுத்துக் கற்றிடக் கல்விக்கு
ஒவ்வாமை இல்லையெனும் பேச்சில்லை, எதையும்
தள்ளாமை பிரிவினை செய்யாமை சிறக்கும்!
வெல்லாமை நீதிக்கும் உண்டன்றோ, பூமிதனில்
கொல்லாமை கொடுமை செய்யாமை மறைவது
நீங்காமை இவையென நிலைத்திட எவையோ!
துள்ளாமை துயரத்தில் தாளாமை வேண்டாம்
நில்லாமை யாதுமென அனுபவங்கள் கூறும்
சிதறாமைத் தத்துவங்கள் உள்ளத்தே உணர்வீர்!

இரா.தில்லைராஜன்

# வண்ணமயமாகும் விண்ணகம்



மேற்றிசை வானை மெல்லவே பார்த்தேன்
மீதுறும் வண்ணம் திகழ் எழிற் சிற்பம்
நாற்றிசை தோறும் நர்த்தனம் புரியும்
நல்லியல் குன்றா மணிச்சுடர்க் குன்றம்

சேற்றினில் மிதக்கும் செந்தணல் ரோசா
சிற்றிதழ் மேலே செவ்வொளிக் காவை
காற்றினில் பறக்கும் கவினுறு பொய்கை
கரையிலா அழகின் பொன் மணிச்சிகரம்

புதுமைகள் சுரக்கும் புத்தெழில் வடிவில்
பூத்திடும் வண்ணப் பல்வகைப் பூக்கள்
எதுகையும் மோனையும் போல் மிளிர் அழகில்
எத்தனை கோடிப் பூத்தொழில் குமிழ்கள்

பண்ணிற மேகப் படுக்கைகள் ஆங்கே
பார்த்திட வொண்ணாப் பட்டொளிக்காட்சி
எண்ணிறம் இதுவென்றுணர்த்திட இயலா
எழிலுறும் கோடிப் பரிதியின் ஆட்சி

கடலலை நீலம் கருங்குழல் படுக்கை
கணப் பொழுதின் பின் பன்னிறத் திவலை
திடமென எண்ணித் திகைத்தபின் ஆங்கே
திகிலுற வைக்கும் தீப்பெருங் குழம்பு

கருமலை நடுவே கலையெழில் முற்றம்
கற்பனை கடந்த கோபுரக் கலசம்
தெரிவன வண்ணத் திகழ் ஒளிப் பொழிவாய்
சீருறும் வானத்தியல் புதான் என்ன?

ஆனையூர்க் கவிராயர்
மா.பஞ்சலோகரஞ்டன்

# என் அம்மா




பத்து மாதம் என்னை சுமந்து எடுத்த தாயே
உன் கருணையில் என் இதயம் உருகுகிறது
நீ தரும் அன்பினால் இவ் வுலகம் மறக்கிறது
வேண்டிய போதெல்லாம் உணவு தருவாய்

அடிக்கும் கையால் அணைத்திடவும் செய்வாய்
அழகாய் நீ புத்திமதி கூறிடுவாய்
அதைமீறி நடந்தால் நல்ல வழி காட்டிடுவாய்
யாருக்காகவும் என்னை விட்டுக் கொடுக்கமாட்டாய்

எனக்கு நோய் வந்தால் பசி மறந்து என்னை காப்பாய்
எனக்கு நோய் தீர கடவுளிடம் கேட்பாய்
உன்னைப் போன்று இல்லை ஒருவரும் இவ்வுலகில்
என்னால் மறக்க முடியாத எனது அழகு தேவதை.

**பிரதீபன் பிரணவி**
**நாயன்மார்கட்டு, நல்லூர்.**

# மனதிற் கொள்ள வேணும்




கூட்டம் வைக்கிறார் கூடிப் பேசிறார்
நாட்டம் ஏதுமில்லை இவர்
ஆட்டம் யாவுமே
அடக்கி ஆளத்தான்
மாற்றம் காண்ப தேது...? இவர்
மனதிற் கொள்வதேது.

நீதிமான்கள் போல் மேடை முழங்குவார்
நெஞ்சில் அதனைக் கொள்ளார்... இவர்
சிந்தை தெளியவில்லை...
இனவாத மொன்றுதான் உள்ள மீதிலே
உறங்கிக் கிடப்பதறிவீர் - பகை
வளரும் வாய்ப்பு அதிகம்

உலகம் சுற்றினார் உவந்து பேசினார்
கலகம் வென்று வந்தோம் நீதி
பேணி ஆர்வ மென்றார் மக்கள்
சொந்த நிலங்களை அபகரிப்பதே
சிந்தைச் செயலதாச்சு இப்போ
மந்தைக் கூட்டமானார் தமிழர்
மந்தைக் கூட்டமானர்.

- வளவை வளவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் தலைவர்! உலக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற வீரகாவியம்...

ஜூனியர் விகடன்

தமிழர்களின் வாழ்வுரிமைக்காக, அரச பயங்கரவாதத்தை எதிர்த்து, ஆயுதமேந்திப் போராடி வந்த இயக்கம் 'தமிழ் நாடு விடுதலைப் படை.' தோழர் தமிழரசன் தலைமையிலான அந்த இயக்கத்தை மாணவப் பருவத்திலேயே நான் ஆதரித்ததும், அதைத் தொடர்ந்து 45 ஆண்டுகால என் பொதுவாழ்க்கை பயணத்துக்கு ஆதாரமாக உத்வேகம் அளித்துக்கொண்டிருப்பதும், 'என் தலைவர்' அண்ணன் மேதகு வே.பிரபாகரன் தான்!

தமிழ், சிங்களம் என இரு மொழி பேசுகிற மக்கள் வாழ்கிற இலங்கையில், சிங்கள மொழிக்கும், அந்த மக்களுக்குமே முன்னுரிமை கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள். இந்த அடிப்படைவாத இன அழிப்பு அரசியலை எதிர்த்து, பல தசாப்தங்களாக அறவழியில் போராடியவர்கள் நம் ஈழச் சொந்தங்கள். ஆனால், அந்த ஈழச் சொந்தங்களை, ஈவிரக்கமின்றி வதைத்து வந்தது சிங்கள பௌத்த பேரினவாத அரசு.

### உலகம் பார்க்காத வீரச் செறிவு!

'இடியும் மின்னலும் இல்லாமல் மழை பொழியாது. போராடாமல் யாரும் எதையும் தர மாட்டார்கள்' என்கிற புரிதலோடு, உணர்வெழுச்சியுடன் தன்னிச்சையாகக் கிளர்ந்தெழுந்து, 'விழிப்புதான் விடுதலைக்கான முதல் படி' என இளம்வயதிலேயே துப்பாக்கி ரவையாகக் களத்தில் பாய்ந்தவர்... தலைவர் பிரபாகரன். ராஜராஜ சோழன் தொடங்கி ஃபிடல் காஸ்ட்ரோ வரை ஆயிரமாயிரம் வீரப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்களும் வரலாறுகளும் இருந்தாலும், ஈழத்தில் சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிராக எம் தலைவர் கட்டிய படையும், அவர் நடத்திய 30 ஆண்டுகாலப் போரும், உலக வரலாற்றில் என்றைக்கும் தனித்துவமானது.

சுமார் 40,000 இயக்கப் போராளிகளுடனும், லட்சோபலட்ச தமிழர்களின் ஆதரவுடனும், சிங்களப் பேரினவாத அரசை வெலவெலக்கச் செய்தவர், எம் இனத்தின் மாவீரன். இரத்தம் சிந்திடும் போரில், அதிகாரம் கைக்கு வந்துவிட்டால் அது வெற்றி, அதிகாரத்துக்கு அடிபணிய நேரிட்டால் அது தோல்வி. ஆனால், 'உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்..!' என உலகம் பார்க்காத வீரச் செறிவுகொண்டு சமர் செய்தவர் தலைவர் பிரபாகரன்.

30 ஆண்டுகாலம் இலங்கை அரசுக்குக் கிலியூட்டிய புலிப்படைத் தலைவர். வீரத்தின் விளைநிலமாகத் தமிழ் ஈழத்தை மாற்றிக்காட்டிய மனிதர். அவருடைய ஆற்றல், தலைமைப் பண்புகளைத் தாண்டி, புலிகளின் தனிமனித ஒழுக்கமும், எந்தச் சூழலிலும் தணியாத வேட்கையும்தான் தலைவர் பிரபாகரனை இன்றளவும் நினைவுகூரவைக்கிறது. குறிப்பாக, "தீர்வு கிடைக்கும்வரை என் போராட்டத்தைக் கைவிட மாட்டேன்" என உண்ணாவிரதம் இருந்து மடிந்த திலீபனின் மறைவு, என் இளம் வயதில் என்னைப் பெரிதும் பாதித்தது.

### புலிகளுடனான தொடர்பும்... தலைவர் மீதான பிரமிப்பும்!

கடலூர் மாவட்டம், புலியூர் கிராமத்தில் விவசாயக் குடியில் பிறந்த எனக்கு, இளமைப் பருவத்திலேயே போர்க்குணத்துடன்கூடிய அரசியல் பங்களிப்பின் அவசியத்தை ஆழமாக விதைத்தது, புலிகளுடனான தொடர்பும், தலைவர்மீதான பிரமிப்பும்தான். ஆம்... 1980-களில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியின் முன்னெடுப்பில், பயிற்சிக்காகப் போராளிகள் தமிழகத்துக்கு அழைத்துவரப்பட்டபோது, அவர்களுள் ஒருவனாகவே நாட்களைக் கழித்தேன். புலிகளின் வீரக் குரல்கள் புகட்டிய மாவீரம் செறிந்த வரலாறும், அதன் பிறகான 1983 ஜூலை கலவரமும், என் சராசரி வாழ்வைத் திசைதிருப்பிப் போட்டது. ஈழ ஆதரவுப் போராட்டங்களிலும், அரச பயங்கரவாதங்களை அழித்தொழிக்கும் ஆர்ப்பாட்டங்களிலும் தொடர்ந்து பங்களிப்பு செய்து வந்தேன்.

தமிழீழத் தாயகத்துக்காகப் போராடிய எம் சொந்தங்களை, மனிதாபிமானமற்ற முறையில் சிங்கள அரசு வதைத்த போதும்... போர் விதிமுறைகள் அனைத்தையும் புறந்தள்ளி, கொடூரம் புரிந்த போதும் அறத்தையும் நேர்மையையும் மட்டுமே கடைப்பிடித்தவர்கள் விடுதலைப் புலிகள். இந்த எண்ணம் புலிகளின் மீது அளவிட முடியாத அன்பும் காதலும் எனக்குள் ஏற்பட்டன.

### உயிர்நேயம் மிக்கவர்கள் புலிகள்!

பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நடைபெற்ற ஆயுதத் தாக்குதல்களில், பொதுமக்கள்மீது வன்முறையையோ, பெண்கள்மீது பாலியல் தாக்குதலையோ தொடுக்காத ஓர் அமைப்பு உலகில் இருக்குமெனில், அது விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டும் தான். இக்கட்டான போர்ச்சூழலில், இராணுவத்தைப் பின்வாங்கச் செய்ய 'இரணைமடு அணையைத் தகர்ப்போம்' எனத் தளபதிகள் சொன்ன போது, 'இலங்கை மக்கள் பாதிக்கப்படும் குறுக்குவழித் தாக்குதலைச் செய்ய மாட்டேன்' என உறுதியாக நின்றவர் பிரபாகரன். பல நேரங்களில், புலிகளின் எல்லைக்குள் சிங்களவர்கள் வழிதவறி வந்தபோதும், சிக்கிக்கொண்டபோதும் அவர்களை பத்திரமாக ஒப்படைத்த மகத்தான உயிர்நேயம் மிக்கவர்கள் புலிகள். உலக அளவில், பெண்ணுரிமைக்குப் போராட்டம் நடந்துகொண்டிருந்த போது, வீரத் தமிழச்சிகளால் படை நிரப்பி, போர்க்களத்தில் ஆணாதிக்கத்தை அழித்தொழித்ததும் புலிகளே.

இயற்கை வளக் காப்புப் போராட்டங்களுக்கு எங்களை உசுப்பியதும் தலைவர் பிரபாகரன்தான். ஆம், 'திருகோணமலையின் ஒரு பகுதியை எங்களுக்குத் தாருங்கள். ஈழம் அடைய உதவுகிறோம்' என அமெரிக்கா சொன்ன போது, 'சுதந்திரம் வேண்டிக் கிளர்ந்தெழும் ஓர் இனம், பொருளாதார வாழ்வில் தன் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும். அத்தகைய இனத்தால்தான் சுதந்திரத்தை அனுபவிக்க இயலும் என்பது நியதியாகும்' எனக் கூறி, அமெரிக்காவின் கோரிக்கையை முற்றுமுழுவதுமாக மறுத்தார் பிரபாகரன்.

அவர் நினைத்திருந்தால், உலக வல்லாதிக்கத்துடன் சமரசம் செய்துகொண்டுகூட தமிழீழம் அமைத்திருக்க முடியும். ஆனால், அப்பழுக்கற்ற நிலையில் சுயம்புவாகத் தோன்றி, மண்ணின் விடுதலைக்காகப் போராளிகளை மண்ணிலும், விண்ணிலும், கடலிலும் போரிடவைத்தார் பிரபாகரன்.

### "இனப்படுகொலைக்கான சர்வ தேச நீதி விசாரணை வேண்டும்!"

வல்லாதிக்கங்களை எதிர்த்த தலைவர் பிரபாகரன், 'இந்தியாவின் அனுசரணையோ, பங்களிப்போ இல்லாமல் தமிழீழ விடுதலை சாத்தியமில்லை' என்பதிலும் மிகத் தெளிவாக இருந்தவர். ஆனால், இந்திய அமைதிப்படை சிங்கள அரசுடன் கைகோர்த்த தருணத்தில், இந்தியாவுக்கு எதிராக அவர் செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். 'தமிழீழ அரசு அமைவது, இந்திய அரசுக்கு ஒரு பாதுகாப்பு' என்கிற புரிதல், அம்மையார் இந்திரா காந்திக்கு இருந்ததுபோல், அடுத்தடுத்து வந்த பிரதமர்களிடம் இல்லை என்பதே மிகப்பெரிய துரதிர்ஷ்டம்.

ஈழத்தில் இறுதிப்போர் நடந்த காலகட்டத்தில், நான் பா.ம.க-வில் இருந்தேன். அப்போது 'நம் இனம் அழிவதைத் தடுக்க, இந்திய அரசு உடனே போரில் தலையிட வேண்டும்' எனக் கோரி, "பா.ம.க சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க வேண்டும் நாம் பதவி, பொறுப்புகளைத் துறக்க வேண்டும்" என்றெல்லாம் மருத்துவர் ராமதாஸிடம் நான் வலியுறுத்தினேன். அதனால், எங்கள் இருவருக்கிடையே கருத்து முரணும், இடைவெளியும் அதிகமாகின. எனது எந்தப் பரிந்துரையும் ஏற்கப்படாததால், நானாகவே ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்தேன். இதைக் கண்டு விடுதலைப் புலிகளின் முக்கியத் தலைவர் நடேசன், போர்முனையிலிருந்து என்னைத் தொடர்பு கொண்டது இன்றைக்கும் பசுமையாக நினைவில் நிற்கிறது.

நினைத்துப் பார்க்க முடியாததெல்லாம் அங்கே நடந்துவிட்டன. ஈழத்தில் இப்போது போர் மௌனிக்கப்பட்டிருந்தாலும், அங்கு நடந்த மாபெரும் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். தமிழ்த் தேசிய அமைப்புகளின் நீண்டநாள் கோரிக்கையான, தமிழ் ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அந்த வரிசையில் மிக முக்கியமாக, எம் இந்திய மண்ணில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் என் ஈழ உறவுகளுக்கு, இரட்டைக் குடியுரிமையை உறுதிசெய்ய வேண்டும். இதுதான் புலிகளுக்கு நாம் செய்கிற மரியாதையாக இருக்கும் எனது போராட்டம் அதை நோக்கியதாகவே இருக்கும்!

**தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரும் ஈழத் தமிழர் நலனில் அக்கறை கொண்டவருமான தி.வேல்முருகன் அவர்கள் ஜீனியர் விகடன் இதழுக்கு வழங்கிய செவ்வி இங்கே அப்படியே பிரசுரமாகிறது - (ஆ-ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

பாடகர் : டி. எம். சௌந்தரராஜன்
இசையமைப்பாளர் : எம். எஸ். விஸ்வநாதன்
படம் :- பாபு



இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே
இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே
பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்
அவன் கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்

பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்...
இதோ எந்தன் தெய்வம் முன்னாலே...

அவன் பூ விரியும் சோலையிலே மணப்பான்
இசைப் பூங்குயிலின் தேன் குரலில் இருப்பான்
அவன் பூ விரியும் சோலையிலே மணப்பான்
இசைப் பூங்குயிலின் தேன் குரலில் இருப்பான்

குளிர் மேகமென தாகத்தையே தணிப்பான்
தளிர்க்கொடி விளையும் கனிகளிலே இனிப்பான்
குளிர் மேகமென தாகத்தையே தணிப்பான்
தளிர்க்கொடி விளையும் கனிகளிலே இனிப்பான்
பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்
அவன் கருணையுள்ள நெஞ்சினிலேகோயில் கொள்கிறான்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே...

பல நூல் படித்து நீ அறியும் கல்வி
பொது நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம்
பிறர் உயர்வினிலே உனக்கு இருக்கும் இன்பம்
இவை அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்
இவை அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே...

தன் வியர்வையிலும் உழைப்பினிலும்
வாழ்வைக் கண்டு தொழில் புரிந்து உயிர் வளர்க்கும் ஏழை
அவன் இதழ் மலரும் சிரிபொலியாய் கேட்டேன்
அந்த சிரிப்பினிலே இறைவனை நான் பார்த்தேன்
அந்த சிரிப்பினிலே இறைவனை நான் பார்த்தேன்
பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்
அவன் கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்

இதோ எந்தன் தெய்வம் முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே
ஹா..ஆஅ..ஹா..ஆஅ.. ஹோ ஒ ஹோ .

# தேனீக்களின் அதிசய அரசாங்கம்!




இனிப்பு திரவம், மகரந்தம் கலந்து உருவான தேன், அறுங்கோண வடிவ அறையில் துப்பப் படும். அப்படித் துப்பும்போது தேன் அதிக ஈரப்ப தத்துடன் இருக்கும். ஈரப்பதம் சரியான விகிதத்தில் பராமரிக்கப்படவில்லையென்றால் தேன் கெட்டு விடும். அதனால் அதிக ஈரப்பதத்தை ஆவி யாக்குவதற்கு ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவில் உள்ள தேனீக்கள் அதிக வேகத்தில் இறக்கை வீசி ஈரப்பதத்தைப் பராமரிக்கும். மனிதர்களது இதயத்துடிப்பு ஒரு நிமிடத்துக்கு 80 முதல் 120 முறை வேகமாகத் துடிக்கும் என்கி றோம். ஆனால், ஈரப்பதத்தைப் பராமரிக்கும் தேனீக்களின் இறக்கை வீச்சு ஒரு நொடிக்கு 190 முறை இருக்கும். ஒரு நிமிடத்துக்கு 11,400 முறை இறக்கை வேகமாக அடிக்கும். இதன் மூலம் அதிக ஈரம், ஆவியாகி தேவையான ஈரப்பதம் காக்கப்படும்.

**பதவி உயர்வு...**


தேனீக்கள் காலனியில் உள்ள பல்வேறு குழுக் களைப் பற்றிப் பார்த்தோம். ஆனால், ஒவ்வொரு குழுவிலும் எல்லாத் தேனீக்களும் இடம்பெற முடியாது. படிப்படியாக ஒவ்வொரு குழுவிலும் வேலை செய்து, அதில் கிடைக்கும் அனுபவத் துடன் தான் பதவி உயர்வு பெற்று அடுத்தடுத்த குழுக்களுக்குச் செல்ல முடியும் என்பது ஆச்சரிய மான உண்மை.

முதலில் புழுக்களைப் பராமரிக்கும் குழு. அதில் பணியாற்றிய பிறகு காலனியைத் தூய்மைப்படுத்தும் தூய்மைப் பணியாளர் குழு. அது முடிந்த பிறகு காவல் காக்கும் குழு எனப் படிப்படியாகத்தான் ஒவ்வொரு குழுவிலும் இடம்பிடிக்க முடியும். அதன் பிறகு தேனை அறையில் வைக்கும் குழு. அதற்குப் பிறகு இறக்கை அடித்து ஈரப்பதத்தைக் குறைக்கும் குழுவுக்கு முன்னேற முடியும். அந்தப் பணி முடிந்த பிறகு தான் வெளியில் சென்று பூக்களைக் கண்டு பிடிக்கும் குழுவில் இடம் பெற முடியும்.

அதன் பிறகுதான் இனிப்புத் திரவத்தையும் மகரந்தத்தையும் சேகரிக்கும் வேலை. கூட்டுப்புழு விலிருந்து வெளியே வந்த தேனீக்கள் உடனடியாகத் தேனைக் கண்டுபிடித்துத் தேனை எடுத்துக்கொண்டு வருவதற்கு அனுமதியில்லை. முதலில் கூட்டுக்குள் உள்ள பணிகளைச் செய்த பிறகுதான் கூட்டை விட்டு வெளியே எட்டிப் பார்க்கும் காவல்காரன் பணி கிடைக்கும். அதன் பிறகு, இறக்கை அடிக்கும் பணியில் ஈடுபட்டு, இறக்கைக்குப் பலம் கூட்டிய பிறகு பறந்து செல்லும் பணியில் இடம்பெற முடியும். நாம் பார்ப்பது வெறும் தேன் கூடு அல்ல... அதன் உள்ளே ஒரு நேர்த்தியான, இராணுவ கட்டுக்கோப்பான ஓர் அரசாங்கமே செயற்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

(முற்றும்.)

# மனிதனிடம் தோற்றுப்போன AI



ஸ்வீடனில் உள்ள நிதி தொழில்நுட்ப நிறுவனம் ஒன்று மனிதர்களை வேலை யிலிருந்து நிறுத்திவிட்டு செயற்கை நுண்ண றிவைப் பயன்படுத்தும் முயற்சியில் பலத்த அடி வாங்கியுள்ளது.

கிளார்னா ஒரு 46 பில்லியன் டொலர் மதிப்புகொண்ட நிதிதொழில்நுட்ப நிறுவனம். செயற்கை நுண்ணறிவின் மீதிருந்த அதீத நம்பிக்கையால், கடந்த ஆண்டு அவர்களது 700 பணியாளர்களை நீக்கிவிட்டு செயல் முறைகள் மொத்தத்தையும் தானியங்கு முறைக்கு மாற்றியது.

"மனிதர்களாகிய நாம் செய்யும் அனைத்து வேலைகளையும் AI ஆல் செய்ய முடியும்" எனக் கூறியது இந் நிறுவனம்.

செப்பாஸ்டியன் சீமியாட்கோவ்ஸ்கி, நிறுவனத்தின் செலவுகளைக் குறைக்கவும் போட்டி நிறைந்த துறையில் செயல் திறனை அதிகரிக்கவும் செயற்கை நுண்ணறிவை வழக்கமாக மனிதர்கள் செய்யும் பணிகளை மேற்கொள்ளச் செய்தார். ஆனால் அந்த முடிவு சரியானதாக அமையவில்லை.

கிளார்னா நிறுவனம் அதன்பிறகு ஏகப்பட்ட செயற்பாட்டு மற்றும் நன்மதிப்பு சிக்கல்களை எதிர்கொண்டது. குறிப்பாக வாடிக்கையாளர் ஆதரவுப் பிரிவில் பல [illegible] ந்துள் ளன.

என்னதான் AI- ஐ பயன்படுத்தியது செலவுகளைக் குறைத்தாலும், ஒரு நிறுவனம் நிலைத்திருக்க தேவையான வாடிக்கையாளர் நம்பிக்கையை அதனால் பெற முடியவில்லை.

இதனால் கிளார்னா பல பில்லியன்கள் இழப் பைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது. கிளார்னா மீண்டும் ஆட்களைச் சேர்க்கத் தொடங்கியது. வாடிக்கையாளர் சேவை மையம் மற்றும் முன்னர் மனிதர்களால் நிரப்பப்பட்ட இடங்களுக்கு மீண்டும் பணியாளர்களைச் சேர்க்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையின் தலையில் முட்டையுடைத்த தாய்

## நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



ஸ்வீடனிலுள்ள ஹெல்சிங்போர்க்கை சேர்ந்த 24 வயது பெண்ணொருவர், தனது மகளுடன் இணைந்து அப்பிள் கேக் செய்த வீடியோவை 2023 ஆம் ஆண்டு டிக்டொக்கில் பதிவிட்டிருந்தார்.

இந்த வீடியோவால் மன உளைச்சலுக்கு உள்ளான பார்வையாளர் ஒருவர், இது குறித்து புகாரளித்தார். புகாரை விசாரித்த நீதிமன்றம், சிறுமியின் தாய்க்கு ரூ.1.7 லட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டது. மேலும், ஒரு குழந்தையிடத்தில் இத்தகைய செயற்பாட்டை செய்யக்கூடாது எனவும் நீதிமன்றம் கண்டித்தும் இருக்கிறது.

**அப்படி என்ன நடந்தது?**

2023 ஆம் ஆண்டு, சம்பவம் நடந்தபோது, தாய் தன் மகளுடன் இணைந்து அப்பிள் கேக் செய்வோம் என கூறி அதை வீடியோவாக பதிவு செய்துள்ளார். வீடியோ படப்பிடிப்பின் போது, எதிர்பாராத விதமாக திடீரென குழந்தையின் நெற்றியில் தட்டி முட்டையை உடைத்து பிராங்க் செய்தார் தாய். அதனால் குழந்தையின் முகத்தில் மஞ்சள் கரு சொட்டியது.

சிறுமியின் அசௌகரியம் மற்றும் ஆச்சரியத்தை படம்பிடித்து பதிவிட்ட தாயின் டிக்டொக் வீடியோ, சுமார் 1,00,000இற்கும் மேலான பார்வைகளைப் பெற்று வைரலானது. பெற்றோர்கள் ஒரு கிண்ணத்தில் முட்டையை உடைப்பது போல நடித்து, திடீரென அதை தங்கள் குழந்தையின் தலையில் உடைப்பது ஆன்லைன் ட்ரெண்டின் அங்கமாக இருந்த வேளையில், இச்சிறுமியின் தாயும் இந்த பிராங்க்கை தனது மகளுடன் செய்து அதை வீடியோவாக எடுத்து டிக்டொக்கில் பதிவிட்டிருந்தார்.

**சிக்கலில் முடிந்த பிராங்க்!**

பிராங்க் வீடியோ பார்வைகளை குவித்தாலும், தாயின் இத்தகைய செயற்பாட்டால் குழந்தைகளின் மனதளவில் ஏற்படும் பாதிப்புகள் நெட்டிசன்களிடத்தில் பேசுபொருளாகி வீடியோவில் விமர்சனங்களும் குவிந்தது. இந்த பிராங்க் வீடியோவால் மன உளைச்சலுக்கு உள்ளான பார்வையாளர் ஒருவர் தெரிவித்த புகாரை நீதிமன்றம் விசாரித்தது.

விசாரணையில் பேசிய வழக்கறிஞர், தாயோடு நாம் அப்பிள் கேக் செய்ய போகிறோம் என அளவற்ற ஆனந்தத்தோடு காத்திருக்கும் குழந்தையின் நெற்றியில் திடீரென முட்டை உடைத்து ஊற்றி தாய் பிராங்க் செய்தால் குழந்தையின் மனம் இந்த அனுபவத்தால் எவ்வளவு பாதிப்பை சந்திக்கும்?

தாய்-மகளின் உறவுப் பிணைப்பு நேரம், பிராங்க் செய்வதற்கான நேரமல்ல. இது தாயின் பொறுப்பற்ற செயல் என வாதங்களை முன்வைத்தார்.

நீதிமன்றத்தின் விசாரணைக்கு பதிலளித்த சிறுமியின் தாய், எல்லோரும் வைரல் ட்ரெண்டை செய்தார்கள் என நானும் அதில் பங்கேற்றேன். என் குழந்தைக்கு எந்தத் தீங்கும் செய்ய நினைக்கவில்லை. என் மகளின் மனதில் இந்த பிராங்க் வீடியோ பாதிப்பை ஏற்படுத்தும் என நான் உணரவில்லை" என பதிலளித்தார். தாயின் பதிலை ஏற்காத நீதிமன்றம், பிராங்க் செய்து குழந்தையைப் பொது வெளியில் சங்கடப்படுத்தியதற்காக அபராதம் விதித்து உத்தரவிட்டது.

# ஆச்சி அறிவுரை



## வெள்ளை ஈ; தடுக்கத் தவறிய அதிகாரிகள்

மாவை.நா.கஜேந்திரன்

**பேராண்டி...**

கலியாண வீடு, செத்த வீடு, கோவில் திருவிழாக்கள் போன்ற நிறையச் சனம் கூடுற இடத்திலை ஏன் தென்னை இலை தோரணம் கட்டுறது எண்டு உனக்குத் தெரியுமோ?

தென்னை ஓலையிலை கிருமிகளை அகத்துறிஞ்சிற சிறப்பு இருக்குது. அதிக சனம் கூடுற இடத்திலை எல்லாரும் ஒண்டா நிக்கேக்கை நோய்த் தொற்று ஏற்பட்டுவிடும். ஆனால் தென்னை ஓலை தோரணங்கள் கட்டுறதாலை அந்தக் கிருமிகளை அது அகத்துறிஞ்சிடும். இதை ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சைவப் பாரம்பரியத்திலை கூறியிருக்கினம்.

மரண வீடுகளிலை பிரேதத்தைத் தென்னம் பன்னாங்கிலை வைக்கிறதும் இதுக்காகத்தான்.

நூறு வருசத்துக்கு முந்தி கண்டுபிடிச்ச விஞ்ஞான கண்டுபிடிப்புக்களெல்லாம் ஆயிரம் வருசத்துக்கு முன்னம் எங்கட சைவப் பாரம்பரியத்திலை இருந்ததுதான்.

இதை இப்ப சொன்னால் எங்களட பிள்ளைகள் சிரிப்பினம்.

பேராண்டி, அண்டைக்கு ஊருக்குள்ள ஒரு செத்தவீடு. பிரேதத்தை பன்னாங்கிலை வழத்துறதுக்கு தென்னை ஓலைக்கு திரிஞ்சு களைச்சுப் போச்சினம்.

ஒருடமும் நல்ல ஆரோக்கியமான தென்னை ஓலை இல்லை. எல்லா தென்னையிலையும் வெள்ளை ஈ தாக்கியதாலை ஓலைகள் எல்லாம் பழுத்துப் போய் தென்னைகளே படுகிற நிலையிலைதான் இருக்குது.

அன்டைக்கு வீட்டு முற்றத்திலை நிண்ட தென்னையில ஓலை ஒண்டு பழுத்துப்போய் இருந்தது. கையாலை பிடிச்சு இழுத்தன். ஓலையிலை இருந்து வெள்ளை ஈயின்ர எச்சம் வெள்ளைப் பவுடர் போல கொட்டிச்சுது.

எனக்கு மூண்டு நாளா சரியான தடிமன் – தும்மல். வெள்ளை ஈயின்ர தாக்கம் நாளுக்கு நாள் தென்னைகளிலை அதிகரிச்சுக் கொண்டே போகுது.

இதனாலை தென்னைகள் சரியாப் பாதிக்கப்பட்டுப்போச்சு. ஒரு தேங்காயின்ர விலை 200 ரூபாவைத் தாண்டிட்டுது. தென்னை மட்டை ஒண்டு 150 ரூபாக்கு மேல. எங்கட வாழ்க்கையிலை இப்படி ஒரு விலையேற்றம் நடக்கவேயில்லை பேராண்டி.

இந்த வெள்ளை ஈக்களை வேணுமெண்டு பரப்பினதாகவும் சொல்லப்படுது. அதுன்ர உண்மை–பொய் தெரியேல்லை.

எங்கட இந்து சமயத்திலை தேங்காய்கள் மிக முக்கியமான ஒண்டு. சமையல் எண்டுற முக்கியத்துவத்தோட, சைவப் பாரம்பரியத்திலை தேங்காய் பின்னிப் பிணைஞ்சிருக்குது. இதுகளை எங்கட அரசியல்வாதிகளும் கதைக்க மாட்டினம். சைவப் பெரியவர்களும் கதைகக் மாட்டினம்.

பார்க்கப் போனால் வடக்கிலைதான் வெள்ளை ஈ தாக்கம் அதிகம் போல.

இதைக் கட்டுப்படுத்த அரசாங்கமோ, அரச அதிகாரிகளோ எடுத்த நடவடிக்கைகள் என்ன எண்டு கேட்டால், எதுவும் இல்லை எண்டுறதுதான் பதில்.

இப்பத்தைய விஞ்ஞான வளர்ச்சியின்ர நிலையில இதைக் கட்டுப்படுத்துறது அவ்வளவு பெரிய விஷயம் இல்லை.

ஆனால் ஏன்தான் இதுக்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்கினமோ தெரியேல்லை.


எல்லாம் முடிஞ்சதுக்குப் பிறகு வெள்ளை ஈயை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறதும் தென்னையை தீ வைச்சு எரிக்கிறதும் ஒண்டுதான்.

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை விரல் மச்சங்களும் பலன்களும்



**கை** விரல்களில் அமையும் மச்சங்களுக்கு ஏறத்தாழ ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே மாதிரியான பலன்கள்தான். கட்டை விரலில் மச்சம் இருந்தால், எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பர்.

ஆள்காட்டி விரலில் மச்சம் இருந்தால், தலைமைப் பொறுப்பு வகிப்பவர்களாக இருப்பர். ஆட்சி அதிகாரம் செய்யக்கூடிய அம்சம் பெற்றவர்களாக இருப்பர். தன்னம்பிக்கை அதிகம் இருக்கும்.

நடுவிரலில் மச்சம் இருப்பின், கலை உள்ளம் படைத்தவர்களாக இருப்பர். குறிப்பாக வாய்ப்பாட்டு, இசைக் கருவிகள், நடனம், நாடகம் போன்றவற்றில் சிறந்து விளங்குவார்கள்.

மோதிர விரலில் மச்சம் அமைந்திருப்பின், அழகான தோற்றமும், அளவான உடல் அமைப்பும் அமைந்திருப்பது இயற்கை. இவர்களிடம், எதையும் கூர்மையாக விளங்கிக் கொள்ளும் இயல்பு உண்டு. எதிர்ப்புகளை இவர்கள் முறியடிப் பார்கள்.

சுண்டு விரலில் மச்சம் இருந்தால், சரஸ்வதியின் அருள் பெற்றவர்கள் என்பது சாஸ்திர விதி. கல்வித்துறையில் இவர்களுக்கு மிகவும் உயர்ந்த தகுதி அமையும்.


இந்த அன்பர்கள், எந்தக் காரியத்திலும் முன்னெச்சரிக்கையாகச் செயற்படுவார்கள். இவர்களில் பெரும்பாலானோர், தனியார் துறையில் உயர் நிலையில் இருப்பார்கள். சிலர், அரசியல் துறையில் பேச்சாளராக இருப்பார்கள். வழக்கறிஞராகப் பேரும் புகழும் அடையும் வாய்ப்பும் உண்டு.

# நல்வாழ்வுக்கு 4 படிகள்!




### ஹெல்த்தி டயட்

1. தினமும் 2 வகையான பழங்கள், 3 வகையான காய்கறிகளை சாப்பிட வேண்டும்.
2. பிரேக்ஃபாஸ்ட்
3. பருப்பு தோசை, காய்கறி உப்புமா, இட்லி சாம்பார், சிறுதானிய பொங்கல் போன்றவை நல்லது.
4. இரண்டு முறைக்கு மேல் தேனீர், டீ வேண்டாம்.



### தொடர் உடற்பயிற்சிகள்

1. காலையில் எந்த உடற்பயிற்சியைச் செய்தாலும், அன்றைய நாள் முழுவதும் புத்துணர்வுடன் வைத்திருக்கும்.
2. உடற்பயிற்சி செய்வதால் மூளையில் என்டார்ஃபின் நன்கு சுரக்கும். இது, மகிழ்ச்சியான, பாசிட்டிவ் எண்ணங்களை ஏற்படுத்தும்.
3. டென்னிஸ், வோலி பால் என பிடித்தமான எந்த விளையாட்டாக இருந்தாலும், அரை மணி நேரமாவது ஒதுக்குவது நல்லது.



### ரிலாக்சேஷன்

1. தூங்கச்செல்லும் முன் மனதுக்குப் பிடித்த பாடல்கள் கேட்பது, புத்தகம் வாசிப்பது போன்ற பழக்கங்களை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.
2. மதுவை தவிர்க்க வேண்டும். மது, மனநிலையை சீர்குலைக்கும். நல்ல தூக்கம் வராது. அதனால் எந்த ரிலாக்சேஷனும் கிடைக்காது.
3. நல்ல நல்ல ஜோக்குகள், நகைச்சுவை வீடியோக்கள் பார்ப்பதால் நமது உடலும் மனமும் ரிலாக்ஸாகும்.

### தேவையான அளவு ஓய்வு



1. குறைவான தூக்கம், பல நோய்களுக்கும் காரணமானதோடு நமது அன்றாட வேலைகளையும் நாம் சிறப்பான முறையில் செய்வதற்கு தடையாக அமையும்.
2. சரியான தூக்கம் தொடர்ச்சியாக இல்லையென்றால், உடல் பலவீனம், தலைவலி போன்ற பிரச்சினைகள் வரும்.
3. தினமும் 7 முதல் 8 மணி நேரம் தூங்குவது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது.

# பூண்டுக் குழம்பு

## சமைப்போம் சுவைப்போம்

### தேவையானவை :

1. பூண்டு (உரித்தது) – 25 பல்
2. வெந்தயம் – ஒரு தேக்கரண்டி
3. வெங்காயம் – 50 கிராம்
4. தக்காளி – 2
5. புளி – சிறிய நெல்லிக்காய் அளவு (ஊறவைத்து கரைத்துக் கொள்ளவும்)
6. கறிவேப்பிலை, கொத்தமல்லித்தழை (சிறிதளவு)
7. மஞ்சள்தூள் (சிறிதளவு)
8. மிளகாய்த்தூள், மல்லித்தூள்
9. கடுகு, உளுத்தம் பருப்பு, சீரகம் (சிறிதளவு)
10. உப்பு – தேவைக்கேற்ப
11. நல்லெண்ணெய் – 50 மில்லி



### செய்முறை

**வா**ணலி அல்லது மண்சட்டியில் நல்லெண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, உளுந்து, வெந்தயம், சீரகம், கறிவேப்பிலை போட்டு தாளிக்கவும். அடுத்து நறுக்கிய வெங்காயம், பூண்டு பற்களைப் போட்டு மிருதுவாகும் வரை வதக்கவும், அத்துடன் அரைத்த தக்காளியைப் போட்டு பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். இதனுடன் புளிக்கரைசல், உப்பு, மிளகாய்த்தூள், மல்லித்தூள், மஞ்சள் தூள் ஆகியவற்றைப் போட்டு, தேவையான அளவு தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும். குழம்புப் பதம் வந்ததும், கொத்தமல்லித் தழை சேர்த்து இறக்கிப் பரிமாறலாம். முழுப் பூண்டு பற்களைச் சேர்த்து சாப்பிடும் போது பால் சுரப்புக் கூடும். இந்தக் குழம்பு பாட்டி வைத்தியங்களில் முக்கியமானது.

**அளவில் பெரியதாக உள்ள மரபுமாற்ற பூண்டு இந்தியாவில் விளைவிக்கப் படுவதில்லை. சீனா, தாய்வான் போன்ற நாடுகளிலிருந்தே இங்கு வருகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நோபல் பரிசு" கனவு தகுதியானவரா ட்ரம்ப்?

பணம், புகழ் தொடங்கி இரண்டாவது முறை அமெரிக்க ஜனாதிபதி பதவி வரை டொனால்ட் ட்ரம்ப் தான் நினைத்த விடயங்கள், கண்ட கனவுகள் அனைத்தையும் அடைந்து விட்டார். ஒன்றைத் தவிர. அமைதிக்கான நோபல் பரிசு தான் அவர் அடையாத, அடைய முடியாத அந்த ஒற்றைக் கனவு!



**ஐந்து முறை முயற்சி?**

2016ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஜனாதிபதியாக முதன்முறையாகப் பதவியேற்றார் டொனால்ட் ட்ரம்ப். அப்போதிலிருந்தே அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று அவரின் ஆதரவாளர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். கோரிக்கை மட்டுமின்றி, நோபல் பரிசு கமிட்டிக்கு 2018, 2020, 2021, 2024, 2025 ஆகிய ஆண்டுகளில், ட்ரம்ப்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று ஐந்து முறை முன்மொழிதல் விண்ணப்பங்களையும் அனுப்பியிருக்கிறார்கள்.

முதலில், தன் ஆதரவாளர்களைவைத்து அமைதிக்கான நோபல் பரிசைப் பெற முயன்ற ட்ரம்ப், ஒருகட்டத்தில், நோபல் பரிசுக்கு நான் தகுதியானவன் எனத் தனக்குத் தானே தம்பட்டம் அடித்துக்கொள்ளவும் தொடங்கினார். கடந்த ஆண்டு நடந்த தேர்தல் பிரசாரங்களில், எனக்கு ஒபாமா என்று பெயர் சூட்டப்பட்டிருந்தால், 10 விநாடிகளில் எனக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கும். ஒபாமா நோபல் பரிசுக்குத் தகுதியற்றவர். ஆனால், அவருக்கு அந்தப் பரிசு வழங்கப்பட்டது. நான்தான் அந்தப் பரிசுக்குத் தகுதியானவன் என்றெல்லாம் பேசினார் ட்ரம்ப். பிரசாரங்களில் மட்டுமல்ல, பேட்டிகளிலும் இதையே தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

**புலம்பித் தீர்க்கும் ட்ரம்ப்!**

கடந்த பெப்ரவரி மாதம், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை வெள்ளை மாளிகையில் சந்தித்தபோது கூட, அவர்கள் அமைதிக்கான நோபல் பரிசை எனக்குத் தர மாட்டார்கள். இது மிகவும் மோசமானது. நான் தகுதியானவனாக இருந்தும் எனக்குத் தர மறுக்கிறார்கள் என்று புலம்பித் தீர்த்தார் ட்ரம்ப். நோபல் பரிசை அடையும் வரை நிம்மதியான தூக்கம் ட்ரம்ப்புக்கு இருக்காது என்பதைத்தான் அவரது புலம்பல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்தி, அமைதியை உண்டாக்க ட்ரம்ப் மத்தியஸ்தம் செய்ததற்கு நல்ல பலன் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதுவரை இல்லாத வகையில், இரு நாடுகளும் நேரடியாக அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துகின்றன. இதன் பின்னணியில் இருப்பவை ட்ரம்ப்பின் முயற்சிகள்தான். இஸ்ரேல் - ஹமாஸ் மோதலையும் நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் ட்ரம்ப். பல்வேறு கால கட்டங்களில் பெலாரஸ், ரஷ்யா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் சிக்கிய அமெரிக்கர்களை அமைதிப் பேச்சுவார்த்தை மூலமாக மீட்டெடுத்ததும் ட்ரம்ப்தான் என ட்ரம்ப்புக்கு ஏன் நோபல் பரிசு வழங்க வேண்டும்? என்பதற்கான காரணங்களை வரிசையாக அடுக்குகின்றனர்.

**ஆபிரஹாம் அக்கார்ட்ஸ்!**

இத்தனை காரணங்களை ட்ரம்ப் ஆதரவாளர்கள் அடுக்கினாலும், ஆபிரஹாம் அக்கார்ட்ஸ் ஒப்பந்தத்தையே பிரதான காரணமாகச் சொல்கின்றனர். அரபு நாடுகளுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே நிலவும் பதற்றத்தைத் தணிக்க, ட்ரம்ப் எடுத்த முன்னெடுப்பின் விளைவாக உதயமானதுதான் இந்த ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தின்படி ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், மொராக்கோ, சூடான் ஆகிய நாடுகள் இஸ்ரேலுடன் அமைதியை ஏற்படுத்தி, உறவை மேம்படுத்தத் தனித்தனியே உடன்படிக்கை மேற்கொண்டிருக்கின்றன.

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதலை நான்தான் பேச்சுவார்த்தை மூலம் நிறுத்தி வைத்தேன் எனத் தினம்தோறும் சொல்லிக்கொண்டிருந்தார் ட்ரம்ப். ஆண்டாண்டுக்காலமாக இருக்கும் இந்தப் பிரச்சினையை, சில போன் கால்களில் நிறுத்திவிட்டதாக ட்ரம்ப் சொல்வதும், நோபல் பரிசை மனதில் வைத்துத்தான் என்கிறார்கள் விவரமறிந்தவர்கள்.

**தகுதியானவரா ட்ரம்ப்?**

அமெரிக்க அரசியலை உற்றுநோக்கும் சிலரோ, ஒருபுறம் ஆயுத விற்பனை. மறுபுறம் அமைதிப் பேச்சுவார்த்தை இதுதான் அமெரிக்காவின் சமீபத்திய வாடிக்கை. காசாவில் தாக்குதல் நடத்தி இனப்படுகொலையில் ஈடுபடும் நெருங்கிய நட்பு நாடான இஸ்ரேலைத் தடுத்து நிறுத்தத் தீவிரமான எந்த நடவடிக்கையையும் எடுக்காத ட்ரம்ப், அமைதிக்கான நோபல் பரிசுக்கு ஆசைப்படலாமா?

அமைதிப் பேச்சுவார்த்தைக்காக அமெரிக்காவுக்கு வந்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியோடு நேரடி மோதலில் ஈடுபட்டார் ட்ரம்ப்.

இதையடுத்து, மனிதாபிமான அடிப்படையில் உக்ரைனுக்கு வழங்கிய உதவிகளையும் நிறுத்தினார். இப்படி தடாலடியாக முடிவுகளை எடுக்கும் ட்ரம்ப்புக்கு எப்படி அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்கும்? எனக் கோபத்துடன் கேள்வி எழுப்புகின்றனர்.

அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற எவரும், தனக்கு அந்தப் பரிசு வேண்டும், அதற்காக நான் உழைக்கிறேன் என்று நினைத்து வேலை செய்வதில்லை. ஆனால், ட்ரம்ப் அந்தப் பரிசுக்காகவே வேலைகளை இல்லை, விளம்பரங்களைச் செய்வது போலத் தெரிகிறது. அவர் அப்படிச் செய்வதை நிறுத்திவிட்டு, அமைதிக்காக உண்மையாக உழைத்தார் என்றால், நிச்சயம் அந்தப் பரிசு ட்ரம்ப்பைத் தேடிச் செல்லும்!

# தெளிவே என் சிந்தனையுள்... 11

ஒரு பணக்காரன் இருந்தார். தன்னிடம் நிறையப் பணம் இருக்கிறது. ஆனாலும் மனதில் மகிழ்ச்சி இல்லை என்று தனது நண்பனிடம் புலம்பினார்.

"அடுத்த ஊரில் ஒரு துறவி இருக்கிறார் அவரைப் போய் பார். அவர் மகிழ்வாய் இருக்க வழி சொல்வார்" என்றார் நண்பன்.

அடுத்த நாள் செல்வந்தருக்கு, அடுத்த ஊருக்கு வைரங்களை எடுத்துச் செல்லும் வேலை இருந்தது. அப்படியே துறவியையும் சந்தித்து விடலாம் என்று நினைத்து துறவியிடம் சென்று மகிழ்வுக்கு வழி கேட்டார்.

துறவி திடீரென அவர் வைத்திருந்த வைரப் பொட்டலத்தைப் பறித்துக் கொண்டு ஓடத் தொடங்கினார்.

செல்வந்தர் அதிர்ந்து போனார். அட, மகிழ்வுக்கு வழிதேடி துறவியிடம் வர, இவர் என் பெறுமதிமிக்க பொருட்களைப் பறித்துக் கொண்டு ஓடுகிறாரே என்று கலங்கிய செல்வந்தர் அந்தக் துறவியைத் துரத்தத் தொடங்கினார். துறவியோ, ஊரின் சந்து - பொந்து எல்லாம் சுற்றிச் சுழன்று ஓடினார். செல்வந்தரும் விடுவதாய் இல்லை. துரத்திக் கொண்டே இருந்தார்..

ஒரு கட்டத்தில் துறவி ஓடுவதை நிறுத்திக் கொண்டார். துறவியின் அருகே ஓடி வந்த செல்வந்தர் தனது வைரப் பொட்டலத்தை துறவியிடம் இருந்து பறித்து விட்டு பெருமூச்சு விட்டார்.

அப்போது செல்வந்தரைப் பார்த்து துறவி கேட்டார் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறதா? என்று. செல்வந்தருக்குப் புரியவில்லை, துறவி கூறினார். அன்பரே! நேற்றும் உங்களிடம் இந்தச் செல்வம் இருந்தது. அப்போது உங்களுக்கு மகிழ்வில்லை. இன்றும் அதே செல்வம்தான். ஆனால் நான் அதை அபகரிக்கப் போகிறேன் என நினைத்து என்னிடம் இருந்து பறித்தவுடன் எப்படி உங்களுக்கு மகிழ்வு வந்தது என்றார்.

அன்பானவர்களே! மகிழ்ச்சி என்பது நிலைகளுக்கு ஏற்றாற்போல் மாறுமே தவிர, அனைத்தும் எம் மனங்களைப் பொறுத்ததே. எங்களில் பலர், செல்வம் சேர்ப்பதை நோக்காகக் கொண்டு, அடுத்தவர்களை மதிக்காமல், அவர்களைப்பற்றி நினைக்காமல் ஏய்த்து பிழைக்கிறார்கள்.

அவ்வாறு செல்வம் சேர்ந்தால் மகிழ்வு, நிம்மதி எதுவுமே இருக்காது. எம்மிடம் நிறையச் செல்வம் இருக்கிறது. இதை எப்படிப் பாதுகாப்பது? யாரும் வந்துக் கொள்ளையடித்து விட்டால்? என்ற பயம் மகிழ்ச்சியைத் தொலைத்துவிடும்.

இந்தப் பயத்துடனேயே வாழ்க்கைச் சக்கரம் நிறைவுக்கு வந்துவிடும்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ்.கோட்டை

56

## செங்கை ஆழியான்

ஒல்லாந்த கொமுசாறி போல விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாணக்குடா நாட்டுத்தளபதி கிட்டு இருந்ததால் பின்வருமாறு யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகை பற்றிய விபரங்களைத் தனது சுப்ரிம் கொமாண்ட்டிற்கு அறிவிப்பார்.

"அன்பான தலைவரே, இந்திய அமைதிப்படையின் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரவேசத்துடன் தாங்கள் எனக்கிட்ட பணியினை முடித்துக்கொள்கிறேன். மூன்று ஆண்டுகள் இருபத்தி மூன்று நாட்களான தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகையில் எமக்கிடப்பட்ட பணி செவ்வனே நிறைவேற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியேறாது முடக்கி வைத்திருந்துள்ளேன். 1986 ஆம் கால கட்டம் வரை யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் கூடுதலாக நிகழ்ந்தன. 1987காலகட்டத்தில் பொம்பர் தாக்குதல்களின் துணையுடன் ஷெல் தாக்குதல்கள் நிகழ்ந்தன. ஷெல் தாக்குதல்களினால் யாழ் கோட்டையிலிருந்து நிகழ்ந்தவற்றையே குறிப்பிடுகிறேன். 73 அப்பாவி மக்கள் பலியாகினர் . 464 மக்கள் கடுங்காயங்களுள்ளாகினர். பொம்பர் குண்டு வீச்சுத் தாக்குதலினால் 86 அப்பாவி மக்கள் பலியாகினர். 709 பேர் கடுங்காயங்களுள்ளாகினர் இது என்னளவில் பதியப்பட்ட தகவல்களாகும். இவற்றிலும் கூடுதலாக இருக்கலாமே தவிர குறைய வாய்ப்பில்லை.

"இதயத்தை நெகிழ வைத்த சில சம்பவங்கள் உள்ளன. இன்னமும் மாறாத துயர வடுக்களாகவுள்ளன. ஐயனார் கோயிலில் திருமண நாளன்றே பலியான மணமகன், ஷெல் தாக்குதலால் ஆஸ்பத்திரியில் பலியான நோயாளர், மண்டைதீவுக் கடலில் கொல்லப்பட்ட மீனவர், துப்பாக்கிச் சூட்டிற்கு இரையான மத்திய கல்லூரி மாணவத் தலைவன். இப்படிப் பல மரணங்கள் துயரமானவை தாம்.

நான் அறிந்தவரையில் 600 வீடுகள் வரை இத் தாக்குதல்களினால் சேதமுற்றுள்ளன. எட்டு அரச கட்டடங்கள் முற்றாக அழிந்தன.

254 வர்த்தக நிலையங்களும் 6 ஆலயங்களும் 4பாடசாலைகளும் யாழ் கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்கதல்களால் சேதமுற்றன. ஏறக்குறைய 692 மில்லியன் ரூபாய்கள் வரையில் சொத்துக்கள் அழிந்துள்ளன. இதற்குக் கூடுமேயொழிய குறையாது. இந்த முற்றுகைக்காலத்தில் என் கணிப்பின்படி 136 ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பொலிஸ் விடுதி மினி இராணுவத்தாக்குத்லில் பலர் கொல்லப்பட்டதுடன், 8 பேர் கைதாகினர். தொலைத்தொடர்பு நிலைய இராணுவத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதுடன் 3 ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சரணடைந்தனர். தற்போது எம்மிடம் 11 கைதிகளுள்ளனர். எம் தரப்பில் எல்லாமாக இந்த முற்றுகைக் காலத்தில் 7 போராளிகள் வீரமரணமடைந்தனர்

(தொடரும்...)

# மரக்கலமல்ல.. மனக்கலம்




## கடற்புறா

தெரியும் பூமத்தியரேகை இந்தத் தீவின் குறுக்கே ஓடுகிறது என்றான் இளையபல்லவன்.

அது அத்தனை பெரிய காரணமல்ல.

வேறு எது? பகிட்டாரிஸான்."

"எரிமலையா?"

"ஆம். அது உள்ளூர எப்பொழுதும் குமுறிக் கொண்டிருக்கிறது. அது எப்பொழுது வெடிக்கும் என்பது யாருக்கும் தெரியாது."

"எரிமலைகளின் தன்மையே அப்படித்தான்."

"அல்ல அல்ல. சில எரிமலைகள் வெடிப்பதற்குப் பூர்வாங்கமாகப் பெரும் ஜுவாலைகளை இரண்டு நாட்கள் வீசும். பகிட்பாரிஸான் அத்தனை அவகாசம் கூடக் கொடுக்காது. திடீரெனச் சீறும். சீறினால் அதைச் சமாளிப்பது கஷ்டம். அக்ஷயமுனையும் அப்படித்தான்."

"இந்தத் துறைமுகமா?"

"ஆம் இளையபல்லவரே! இதன் அரசியலும் எரிமலையைப் போன்றது. திடீரென மாறவல்லது. திடீரென இங்கு சம்பவங்கள் ஏற்படும். எதிர்பாராத மாற்றங்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் இங்கு ஏற்பட்டிருக்கின்றன. இதுவும் ஓர் எரிமலை! இதன் உஷ்ணத்தையும் இதன் விபரம் அறியாதவர்கள் சகிக்க முடியாது."

"பலவர்மன் வெளியே கவலையுடனும் உள்ளே உற்சாகத்துடனும் பேசிய பேச்சின் பொருள் இளையபல்லவனுக்குப் புரிந்தாலும், காரணம் மட்டும் புரியாததால், "உங்கள் துறைமுக உஷ்ணத்தின் முதல் பலியாக மகள் மூர்ச்சையாகி விட்டாள். உங்களையும் பாதிக்கப் போகிறது. எச்சரிக்கையாயிருங்கள்" என்று சொல்லிவிட்டு பலவர்மனை இடித்துத் தள்ளி வழி ஏற்படுத்திக்கொண்டு மாளிகைக்குள் சென்று மஞ்சளழகியின் அறைப் பஞ்சணையில் அவளைக் கிடத்தினான். பிறகு அவள் தோழிகளை அழைத்து அவளை ஜாக்கிரதையாகக் கவனிக்கும் படி உத்தரவிட்டு மீண்டும் கடற்கரையை நோக்கிச் சென்றான்.

கடற்கரையில் கடற்புறா நிர்மாணிக்கப்பட்டு வந்த இடத்துக்கு வந்ததும் அதை நீண்ட நேரம் ஏறிட்டு நோக்கிய இளையபல்லவன் புறாவின் அழகிய மூக்கையும் பெரும் இறக்கைகளையும் கண்களிருக்க வேண்டிய' இடத்திலிருந்த பெரும் துவாரங்களையும் பார்த்துப் பூர்ண திருப்திக்கு அடையாளமாகத் தலையை ஆட்டிக் கொண்டான். அதன் பக்கப்பகுதியில் தொங்கிக் கொண்டிருந்த நூலேணியின் வழியாக அந்தப் பெரும் மரக்கலத்தின் தளத்துக்கும் ஏறிச் சென்று அங்கு நடந்து கொண்டிருந்த வேலை முறையையும் கவனித்தான்.

அந்த மரக்கலத்தின் தளத்தில் பக்கப் பலகைகளுக்கு அருகில் ம்றைந்து கிடந்த போர்க்கலங்களையும் அவற்றைத் தூக்கி நிறுத்தவும், படுக்க வைக்கவும் பல கோணங்களில் சாய்க்கவும் அமைக்கப்பட்டிருந்த மர உருளைகள், இரும்புச் சலாகைகள், இவற்றையும் ஊன்றிப் பார்த்த இளையபல்லவன் இதழ்களில் திருப்தியின் புன்னகை யொன்று படர்ந்தது. அதையொட்டி முகத்திலும் பெருமிதச் சாயை விரிந்தது.

இளையபல்லவன் தளத்திலேறியதும், அவனை எதிர்கொண்ட கண்டியத்தேவனும், அவனைப் பின்பற்றித் தளத்தில் உலாவி அவன் முகத்தில் விரிந்த பெருமிதச் சாயையைக் கண்டு உள்ளத்தில் உவகை கொண்டான். அத்துடன் "நன்றி இளையபல்லவரே!" என்றும் கூறினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வெல்லவாய வீதியில் விபத்து

## ஒருவர் பலி-12 பேர் காயம்



(கொழும்பு)

கொழும்பு - வெல்லவாய வீதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் தங்காலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பிலிருந்து காலி நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ், முன்னால் சென்ற லொறியின் பின்புறத்தில் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தங்காலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் பயணித்த சாரதி உட்பட 13 பேர் காயமடைந்து தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், படுகாயமடைந்த பயணி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து சம்பவம் குறித்து தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினிமா முகம் 10; சூர்யா...!



**01.** அம்மா பிள்ளை. தங்கை பிருந்தா மீது சூர்யாவுக்கு அலாதி பாசம். பிருந்தா திருமணத்தை வெகு விமரிசையாக அப்போதே ரூ.40 லட்சம் செலவில் நடத்தி அசத்தினார். தம்பி கார்த்தியின் அமெரிக்க எம்.எஸ் படிப்பையும் பொறுப்பாய் கவனித்துக் கொண்டார். இப்போது தங்கை பிருந்தாவுக்கே கல்லூரி செல்லும் வயதில் பிள்ளை இருந்தாலும், சூர்யாவுக்கு பிருந்தா இன்னும் பிரியமான குட்டித் தங்கைதான்!

**02.** கமல் ரசிகர், சூர்யாவுக்கு சினிமா குருவும் கமல்தான். "தேவர் மகன்" படம் வந்த சமயம் கமல் போலவே பங்க் ஹேர்ஸ்டைல் வைத்துக் கொண்டு திரிந்தவர் சூர்யா. கமல் மேல் மிகப் பெரிய அபிமானம் உண்டு. அவர் அன்பிற்காகவே "ரோலக்ஸ்" நெகட்டிவ் ரோலில் சம்பளத்தை மறுத்து நடித்தவர். பதிலுக்கு கமல் கொடுத்த ரோலக்ஸ் வாட்ச்சைப் பொக்கிஷமாகப் பாதுகாக்கிறார்.

**03.**சித்தர் வழிபாட்டில் ஈடுபாடு உண்டு. முருக பக்தரும்கூட! சமீபத்தில் கோலாப்பூர் மகாலட்சுமி கோயில், கௌகாத்தி காமாக்யா கோயில் ஆகிய வற்றுக்கு ஜோதிகாவுடன் போய் வந்தார். முதல் தடவையாக, ஆர்.ஜே.பாலாஜி இயக்கும் படத்தை பொள்ளாச்சி மாசாணி அம்மன் கோயிலில் பூஜை போட்டுத் தொடங்கினார்.

**04.** மகள் தியா வரும் ஜூலை மாதம் அமெரிக்காவிற்கு மேற்படிப்பிற்காகச் செல்கிறார். மகளைப் பிரிந்திருக்க நேர்வது குறித்து இப்போதே வருத்தத்தில் இருக்கிறார். "ரெட்ரோ" ஷூட்டிங்கின்போது, அமெரிக்கா சென்று படிக்க அழைப்புக் கடிதம் வந்துவிட்டதாக மெசேஜ் வர, எமோஷனலாகி தேம்பித் தேம்பி அழுதிருக்கிறார் சூர்யா.

**05.**பிறந்து, வாழ்ந்து, ஓடியாடித் திரிந்த தி.நகர், கிருஷ்ணா தெரு வீட்டை ஏழை மாணவர்கள் படிக்கும் அகரம் பவுண்டேஷனுக்கு எழுதிக் கொடுத்து விட்டார்கள் சிவகுமார் குடும்பத்தினர். அதன் பின்னணியில் இருப்பது சூர்யா தான்!


**06.**சினிமாவிற்கு வருவதற்கு முன் பிடித்த உணவு பிரியாணிதான். இப்போது டயட்டில் படு ஸ்ட்ரிக்ட். ரெட் ரைஸ், வேகவைத்த காய் கறிகள், வேகவைத்த சிக்கன் என கட்டுப்பாடான உணவுக்கு மாறி பல வருடங்கள் ஆகிவிட்டது. இதுதான் அவருடைய ஸ்ட்ரிக்ட் மெனு. ஹெவியான சாப்பாட்டுக்கு எப்போதும் தடா!

**07.**வருடத்தில் 15 நாட்களாவது அயல்தேசப் பயணம் குடும்பத்தோடு உண்டு. கடந்த மூன்று வருடங்களாக அமெரிக்கா, ரஷ்யா, சுவிட்சர்லாந்து எனப் போய் வந்திருக்கிறார்கள். மனைவி ஜோதிகாவையும் அவர் சினேகிதிகளோடு வெளிநாடு செல்ல ஊக்குவிப்பார்.

**08.**சூர்யாவின் கல்லூரி நண்பர் மனோஜ்தான், சூர்யாவின் கால்ஷீட்டையும் பயணங்களையும் நிர்வகிக்கிறார். இன்னொரு ஆத்ம நண்பர் ராஜசேகர் கற்பூர சுந்தரபாண்டியன் சிறுவயதிலிருந்தே எதிர்வீட்டுக்காரராக ஒன்றாக விளையாடி, சேர்ந்தே வளர்ந்த விதத்தில் தற்போது சூர்யாவின் 2டி நிறுவனத்தை நிர்வகிக்கிறார்.

**09.**ஜோதிகா தேர்ந்தெடுத்துத் தருகின்ற டிரஸ்களை மிகவும் விரும்பி அணிவார். இந்த காஸ்ட்யூம் டிசைன் சினிமா வட்டாரத்திலும் பேசப்படும். நகைகள் மீது எப்போதுமே ஆர்வம் கிடையாது. எப்போதாவது கமல்ஹாசன் விரும்பி அளித்த ரோலக்ஸ் வாட்ச்சை அணிவார்.


**10.**அதிகாலையில் விழித்தெழும் வழக்கம் கொண்டவர். அப்பா வழியாக வந்தடைந்த பழக்கம் இது. எழுந்தவுடன் குளித்துவிட்டு பூஜை யறைக்குச் சென்று வழிபடுவார். நெற்றியில் திருநீறு துலங்கும். இப்போது மனைவி, குழந்தைகளோடு குழந்தைகளின் படிப்புக்காக மும்பையில் இருக்கிறார். ஏழாவது மாடியில் மூன்று படுக்கை அறைகள் கொண்ட சிம்பிள் வீடுதான்.




**"தேர்தலுக்கான** தயாரிப்புகளில் ஈடுபட வேண்டும். நிறைய சுற்றுப் பயணங்கள் செய்ய வேண்டும்." என்றெல்லாம் கணக்குப் போட்டு "ஜனநாயகன்" படப்பிடிப்பை விரைவுபடுத்திவருகிறார் விஜய். மூன்று சண்டைக் காட்சிகள், பாடல்கள் தவிர எல்லாக் காட்சிகளும் முடிகிற தருணத்துக்கு வந்துவிட்டன. குறித்த காலத்துக்கு இரண்டு மாதத்துக்கு முன்பே படம் ரெடியாகிவிடும் என்கிறார்கள்.



ஏ.ஆர். முருகதாஸின் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்து வரும் "மதராஸி" செப்டம்பரில் ரிலீஸ். எதிர்பார்த்ததை விட படம் திருப்தியாக வந்துகொண்டிருப்பதால் மகிழ்கிறார் சிவா. வரும் ஜூன் மாதத்துக்குப்பிறகு, வெங்கட்பிரபுவின் இயக்கத்திற்கு வருகிறார். சமீபத்தில் அதன் கதை விவாதத்திற்காக இலங்கை பறந்து வந்திருக்கிறார் வெங்கட்பிரபு



**"ராக்கெட்ரி"** படத்தை இயக்கிய மாதவன், இப்போதைக்குப் புதிதாகப் படங்களை இயக்கப் போவதில்லை என முடிவெடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இப்போது, அவருக்கு இந்தி சீரிஸ் மற்றும் நிறைய படங்கள் ஒப்பந்தம் ஆகியிருப்பதால்தான் இந்த முடிவாம். தமிழில் அவர் நடித்துவரும் "அதிர்ஷ்டசாலி"யை ஜூலையில் திரைக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளாராம்.



**சூர்யாவின்** "ரெட்ரோ" படத்தை வெளியிட்ட சக்தி பிலிம் பேக்டரி சக்திவேல். படத்தின் இயக்குநர், பாடலாசிரியர், இசையமைப்பாளர் மற்றும் சூர்யா ஆகியோருக்கு வைர மோதிரம் பரிசளித்துள்ளார். அதை அவர் சூர்யாவுக்கு அணிவித்தபோது, உடனடியாக சக்திவேலுக்கே அதைத் திரும்ப அணிவித்து மகிழ்ந்தார், சூர்யா. இந்த அன்பில் நெகிழ்ந்துகொண்டிருக்கிறார் சக்திவேல்.



**விஜய் தேவரகொண்டாவின்** "கிங்டம்" படத்தின் ஹீரோயின் பாக்யஸ்ரீ போர்சே, இதற்கு முன் ரவிதேஜாவின் "மிஸ்டர் பச்சன்" உட்பட டோலிவுட் படங்களில் நடித்திருக்கிறார். என்றாலும் அவர், இப்போது "பேன் இந்தியா நடிகை துல்கர் சல்மானின் "காந்தா"இல் கமிட் ஆகியிருக்கிறார். 1950களின் மெட்ராஸின் பரபரப்பான தெருக்களை, ஹைதராபாத்தில் செட் போட்டுப் படமாக்கிவருகின்றனர்.



**லோகேஷ் கனகராஜ்** தயாரிப்பில் ராகவா லாரன்ஸ் நடிக்கும் "பென்ஸ்" சில மாதங்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தாலும், சமீபத்தில்தான் படப்பிடிப்பு தொடங்கியிருக்கிறது. அதன் கதையையும் லோகேஷ்தான் எழுதியிருக்கிறார். இந்தப் படத்தில் லாரன்ஸுடன், மலையாள ஹீரோ நிவின் பாலியும் இணைகிறாராம். இந்த "பென்ஸ்" படத்தின் மூலம்தான் சாய் அபயங்கர் இசையமைப்பாளராக என்ட்ரி ஆகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

**"காஞ்சனா 4"** படத்தில் நடித்து வந்தார் லாரன்ஸ். கிழக்குக் கடற்கரைச் சாலையில் செட் போட்டு மளமளவென ஷூட்டிங் நடந்தது. இப்போது அதற்கு சின்ன பிரேக் கொடுத்துவிட்டு "பென்ஸ்" படத்தில் நடித்துவருகிறார். இன்னும் காஞ்சனா 4இற்குச் சிறப்பு அம்சங்களும் த்ரில் வகைகளையும் சேர்க்கத்தான் இப்போது பென்ஸ்-யூனிவர்ஸுக்குள் புகுந்திருக்கிறார். காஞ்சனா ஆறாம் பாகம் வரை சான்ஸ் இருக்கிறதாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

451

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உணர்வுகளை உயிருடன் புதைத்தால் அவை ஒரு நாள் உயிர்த்தெழும்

மனித வாழ்வில் உணர்வுகள் முக்கியமானவை. பல சமயங்களில் நாம் எமது உணர்வுகளில் வாழ்கின்றோம்.

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணர்வு வெளிப்பாடு மிகவும் முக்கியமானது. இதற்கான பயன் தரவுள்ள படிமுறைகளைச் சிந்திப்போம்.

**உணர்வுகளை இனம் காணுதல்**

இதுதான் முதற்படி. பல உணர்வுகள் எமக்குப் பழக்கமானவை. மகிழ்ச்சி, ஆச்சரியம், பயம், பாலுணர்வு, வெறுப்பு, குற்றவுணர்வு, கோபம், பொறாமை, திருப்தி என அவை பல வகைப்படும். இந்த உணர்வுகளுள், எமது தற்போதைய உணர்வு என்ன என்பதற்கான விடை எமக்குத் தெரிந்திருத்தல் நன்று. உணர்வுகளைப் புரிந்து கொள்ளப் பின்வரும் வழி முறைகள் பயனுடையவை.

**சுய உரையாடல்.**

எம்முடன் நாம் உரையாடக் கற்றுக் கொள்வதன் மூலம் எமது உணர்வுகளை நாம் புரிந்து கொள்ளலாம்.

நாம் பல தடவைகளில் ஆச்சரியப்படும் அளவுக்கு எமது உணர்வுகள் வேறுபடுவதை இச் செயன் முறையின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

**எழுதுதல்**

எமக்காக நாம் செலவிடும் நேரங்களில் இதனை மேற்கொள்ளலாம். ஒரு அமைதியான குழப்பமில்லாத இடத்தில் உணர்வு வெளிப்பாடை அடிப்படையாக வைத்து மனம் விரும்பிய போக்கில் எழுதுவது எமது உணர்வுகளை எமக்கு வெளிப்படுத்தும்.

**நட்புடன் அளவளாவுதல்**

எமக்கு நம்பிக்கை உறவுகளில் எம்மை நாம் வெளிப்படுத்தும் போது எமது உணர்வுகளை நாம் இணங் காணலாம்.

**உணர்வுகளை ஏற்றுக் கொள்ளலும், பொறுப்பெடுத்தலும்.**

இது இரண்டாம் படி. மிகவும் முக்கியமானதும் கூட. நாம் இனங்காணக்கூடிய எல்லா உணர்வுகளையும் எம்முடைய உணர்வுகளாக ஏற்றுக்கொள்வதும் அவற்றுக்கு நாம் தான் பொறுப்பு எனப் பொறுப்பு எடுப்பதும் இன்றியமையாதன.



பொதுவாக எதிர்மறை உணர்வுகளான கோபம், பொறாமை, குற்றவுணர்வு போன்றவற்றைப் பொறுப்பெடுக்க நாம் விரும்புவதில்லை.

உதாரணம். நான் கோபப்பட்டேன் என்று சொல்வதைத் தவிர்த்து எனக்கு கோபம் வந்தது என்று கூறுவதைக் குறிப்பிடலாம்.

சில உணர்வுகளை ஏற்றுக் கொள்வதில் எமக்குப் பண்பாட்டு ரீதியான தடைகள் தடங்கலாக இருக்கலாம், பாலுணர்வு அவற்றில் முக்கியமானது.

**உணர்வுகளை ஆரோக்கியமாக வெளிப்படுத்துதல்**

இந்தச் செய்முறை எமது வாழ்வையே தீர்மானிக்கின்றது. இது ஒவ்வொருவருக்கும் தனித்துவமானது. நாம் இனங் கண்ட ஏற்றுக் கொண்ட ஒவ்வோர் உணர்வையும் ஆரோக்கியமாக வெளிப்படுத்தும் போது நாம் ஆளுமையில் வளர்ச்சியடைகின்றோம்.

பொதுவாக நேர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவது எமக்கு இலகுவானதாகவும் எதிர் மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவதும் எமக்கே கடினமானதாகவும் அமையலாம். குறிப்பாக எதிர்மறையான உணர்வுகளை ஆரோக்கிய மாகக் கையாளுதல் எமக்கும் பிறருக்கும் மிகவும் முக்கியமானதாகும்.

உதாரணம் "நான் கோபத்தில் கத்திவிட்டேன்" அல்லது நான் கோபத்தில் எனது பிள்ளையை அடித்து விட்டேன் போன்ற வாக்கியங்கள் நாம் அடிக்கடி கேட்பவை.

**எதிர்மறையான உணர்வுகளைக் கையாளும் போது கவனிக்க வேண்டியவை.**

அவ்வுணர்வுகள் நியாயமானவையா எனச்சிந்தித்தல், உதாரணம் கோபம் நியாயமானதா? என்ற வினாவுக்கு விடை தேடுதல். அது நியாயமானதெனில் அதற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிய முற்படல். எனது வரம்புக்குள் அக்காரணத்தை நிவர்த்தி செய்ய முற்படல். இதற்காகப் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட வேண்டி ஏற்படலாம்.

நிவர்த்தி செய்யமுடியாத காரணங்களாயின் உணர்வு வெளிப்பாட்டை மையப்படுத்திச் செயற்படுதல், இதற்கும் உரையாடுதல், எழுதுதல், வாய்விட்டுப் பிரார்த்தனை செய்தல், அழுதல் போன்ற முறைகள்? பயன்படலாம்.

சரியான நேரத்தில் பொருத்தமான நபரிடம் பொருத்தமான அளவில் பொருத்தமான முறையில் உணர்வுகளை வெளிப்படுத்தல் மிகவும் முக்கியமானது. உணர்வுகளை இனங்கண்டு உணர்ந்து அவற்றுக்கு உரிமை கோரி உவப்புடன் வெளிப்படுத்தினால் நாம் ஆளுமையில் வளர்ச்சியடைவோம். அதை விடுத்து உணர்வுகளை உயிருடன் புதைத்தால் அவை ஒருநாள் உயிர்த்தெழும்.

வைத்திய கலாநிதி
G.J.பிரதீபன்
வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்தும் வரை
# சிந்துநதி நீர் ஒப்பந்தம் நிறுத்தப்படும்!

## ஐ.நா வில் உறுதிபடத் தெரிவித்த இந்தியா

**(ஜெனீவா)**

**உலகளாவிய பயங்கரவாதத்தின் மையமான பாகிஸ்தான் எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கான அதன் ஆதரவை நம்பகத் தன்மையுடனும் முழுமையாகவும் நிறுத்தும் வரை சிந்து நதிநீர் ஒப்பந்தம் இடைநிறுத்தப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி பர்வதனேனி ஹரிஷ் தெரிவித்தார்.**



ஐ.நா கூட்டத்தில் பேசிய பாகிஸ்தான் பிரதிநிதி, "தண்ணீர் என்பது உயிர், போரின் ஆயுதம் அல்ல" என்று தெரிவித்ததற்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து பேசுகையில், பாகிஸ்தானின் சதி நடவடிக்கைகள் பொதுமக்களின் உயிருக்கு தொடர்ந்து அச்சுறுத்தலாக உள்ளன. சிந்து நதி நீர் ஒப்பந்தம் குறித்து பாகிஸ்தான் தவறான தகவல்களை வழங்கியுள்ளது.

1960 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தை, பஹல்காம் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட மறுநாளே, ஏப்ரல் 22 ஆம் திததி இந்தியா நிறுத்தி வைத்தது. இந்த கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலுக்கு எல்லை தாண்டிய தொடர்புகள் இருப்பதைக் கண்டறிந்த பிறகு இந்திய அரசாங்கம் நடவடிக்கையை எடுத்தது.

கடந்த ஆறரை தசாப்தங்களாக இந்தியாவிற்கு எதிராக மூன்று போர்களையும் ஆயிரக்கணக்கான பயங்கரவாத தாக்குதல்களையும் நடத்தி, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் உணர்வை பாகிஸ்தான் மீறியுள்ளது.

கடந்த நான்கு தசாப்தங்களில் 20,000இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் பயங்கரவாதத் தாக்குதல்களில் இறந்துள்ளனர். இந்திய குடிமக்களின் உயிர்கள், மத நல்லிணக்கம் மற்றும் பொருளாதார செழிப்பை பாகிஸ்தான் ஆதரவு பெற்ற எல்லை தாண்டிய பயங்கரவாதம் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது எனத் தெரிவித்தார். (நி-8)

## ஐபோன்களை அமெரிக்காவில் தயாரிக்காவிட்டால் 25% வரி விதிக்கப்படும்

### ட்ரம்ப் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஆப்பிள் நிறுவனம் தனது ஐபோன்களை அமெரிக்காவில் தயாரிக்கவில்லை என்றால், இறக்குமதி செய்யப்படும் ஐபோன்களுக்கு 25% வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்பிள் நிறுவனம் தனது ஐபோன் உற்பத்தியை இந்தியாவில் அதிகளவில் உற்பத்தி செய்து வருகின்ற நிலையில் இந்தியாவில் ஐபோன் கள் தயாரிக்கப்படுவதை டொனால்ட் ட்ரம்ப் விரும்பவில்லை.

இந்நிலையில் ஐபோன் தயாரிப்பு குறித்து பேசியிருக்கும் ட்ரம்ப், "அமெரிக்காவில் விற்கப்படும் ஐபோன்கள் அமெரிக்காவிலேயே தயாரிக்கப்படவேண்டும் என்றும் தான் நீண்டகாலமாக ஆப்பிள் நிறுவனத்தின் டிம் குக்கிடம் தெரிவித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐபோன்கள் இந்தியாவிலோ அல்லது வேறு எங்குமோ தயாரிக்கப்படக் கூடாது எனவும் இது நடக்கவில்லை என்றால், குறைந்த பட்சம் 25% கட்டணத்தை ஆப்பிள் நிறுவனம் அமெரிக்காவுக்கு செலுத்த வேண்டும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வரும் அனைத்து இறக்குமதிகளுக்கும் 50% வரி விதிக்கப்படும்" என்று தெரிவித்திருக்கிறார். (நி-8)

## பிரித்தானியா, பிரான்ஸ், கனடா படுகொலையாளிகளுக்கு ஆதரவளிக்கிறது

### நெதன்யாகு சாடல்

(ஜெருசலேம்)

பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் கனடா ஆகிய நாடுகளின் தலைவர்கள் "படுகொலை செய்தவர்களுக்கும் கடத்தல்காரர்களுக்கும் ஆதரவாக இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் வோஷிங்டன் டிசியில் இரண்டு இஸ்ரேலியத் தூதரக அதிகாரிகள் கொல்லப்பட்டமை தொடர்பில் தமது எக்ஸ் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இந்தக் குற்றச் சாட்டை முன் வைத்துள்ளார். குறித்த நாடுகளின் தலைவர்கள் ஹமாஸுடன் இணங்கிச் செயற்படுவதாகவும் இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார். (நி-8)

## ஜேர்மனியில் கத்திக்குத்து 12 பேர் படுகாயம்



(பெர்லின்)

ஜேர்மனியில் ஹம்பர்க் ரயில் நிலையத்தில் இடம் பெற்ற கத்திக்குத்துச் சம்பவம் அந்நாட்டு மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியில் ஹம்பர்க் ரயில் நிலையத்தில் ரயிலுக்காக காத்துக்கொண்டு இருந்தவர்கள் மீது திடீரென மர்ம நபர் ஒருவர் கத்தியால் தாக்கியுள்ளார்.

இந்த தாக்குதலில் 12 பேர் காயம் அடைந்துள்ளதாகவும் இவர்களில் மூன்று பேரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கத்தியால் தாக்கிய நபரை அங்கிருந்த பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்துள்ளதுடன் கத்தி குத்து தாக்குதல் நடத்தியவரின் நோக்கம் குறித்தும் அவரது பின்னணி குறித்தும் விசாரணை நடத்தி வருவதாகவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-8)

## அந்தமானில் ஏவுகணைச் சோதனை விமானங்கள் பறக்கத் தடை விதிப்பு



(அந்தமான்)

அந்தமான் கடல் பகுதி யில், மிக அதிக உயரம் பாய்ந்து செல்லக்கூடிய ஏவுகணை சோதனை நடத்தப்படுவதால் குறித்த வான் வெளியில் விமானங்கள் பறப்பதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

சமீபத்தில் இந்திய அரசினால் பிரம்மோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது. தற்போது, முப்படை களின் உத்தரவின் பேரில், அந்தமான் கடல் பகுதியில், மிக அதிக உயரம் பாய்ந்து செல்லக்கூடிய ஏவுகணை சோதனை நடத்தப்படுகிறது. இதனால் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட் டுள்ளது.

அந்தவகையில் இன்று காலை 7 மணி முதல் 10 மணி வரை அந்தமான் நிக்கோபார் தீவுகளை சுற் றிய 500 கிலோ மீற்றர் நீளவான் வெளியில் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதை உங்களின் திறன்களை விடவும் முடிவுகளே தீர்மானிக்கின்றன. – ஜே.கே.ரோலிங்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை எம் கல்விப் புலத்தின் அடையாளம்

நாடு முழுமையிலும் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளைத் தேசிய கல்வியியல் கல்லூரிகளுடன் இணைக்கின்ற வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரதமரும் கல்வி அமைச்சருமாகிய ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவரின் இந்த அறிவிப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு மூடுவிழா நடக்கப் போவதை உறுதி செய்கிறது.

ஒரு காலத்தில் இந்த நாட்டின் கல்விப் புலம் உன்னதமாக விளங்குவதற்கு மூலகாரணமாக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளே விளங்கின.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் வழங்கிய பயிற்சிகள் சான்றாண்மைமிக்க ஆசிரியர்களை இந்த நாட்டுக்குத் தந்தன.

அதிலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் பல்கலைக்கழகங்களுக்கு நிகரான பணியை ஆற்றின என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் தரமான ஆசிரியர்களை உருவாக்கிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் முற்றுப் பெறுவதென்பது துரதிர்ஷ்டமானது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூறியாக வேண்டும். அதாவது, நாட்டிலுள்ள எல்லா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளையும் மூடுதல் என்றில்லாமல், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை இணைத்தல் என்ற செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி, அதனூடு ஒரு சில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளையாவது தக்க வைக்க வேண்டும் என்பது கல்வியாளர்களின் நிலைப்பாடாக உள்ளது.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பது நூறு ஆண்டுகளைக் கடந்து இன்றுவரை ஆசிரியர்களை உருவாக்குகின்ற பணியை ஆற்றி வருகிறது.

1923ஆம் ஆண்டு சேர் பொன்.இராமநாதன் பிரபுவால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இந்த நாட்டின் கல்விப் பாரம்பரியத்தின் அடையாளம்.

எனவே அதனைப் பாதுகாப்பது இந்த நாட்டினதும் கல்விச் சமூகத்தினதும் தலையாய கடமை.

அதிலும் குறிப்பாக இது விடயத்தில் நம் தமிழ் அரசியல் தரப்புகள் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

நூறு ஆண்டுகளைக் கடந்தும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியை வழங்கிக் கொண்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைப் பாதுகாப்பதென்பது நம் கல்வியைப் பாதுகாக்கின்ற நடவடிக்கையாகும்.

எனவே கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைத் தொடர்ந்து இயங்க வைப்பதில் இந்த நாட்டின் பிரதமர் கருசனை காட்ட வேண்டும் என்பதுடன் இது தொடர்பில் நம் அரசியல் தரப்பினர் உடனடியாகப் பிரதமரைச் சந்தித்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைத் தொடர்ந்தும் நிலைநிறுத்த வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# தமிழின அழிப்புக்கு சான்றாக மற்றுமொரு நினைவுத்தூபி

## கனடாவில் உதயமாகின்றது

கனடாவின் ஸ்காபொரோவில் மற்றுமொரு தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபியை அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கவுன்சிலர் பார்த்தி கந்தவேள் முன்மொழிந்த தீர்மானமே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் கனடாவின் பிரம்டன் நகரில் கடந்த 10 ஆம் திகதி அமைக்கப்பட்ட தமிழினப்படுகொலை நினைவுத்தூபி இலங்கை அரசை மட்டுமல்ல தென்னிலங்கையில் பல்வேறு தரப்பினரிடையேயும் கலக்கத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் அமைக்கப்பட்ட தமிழின இன அழிப்பு நினைவுத்தூபிக்கு எதிராக அநுர அரசு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக கனடாத் தூதுவரை அழைத்த வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் இலங்கை அரசின் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை எனத் தெரிவிப்பவர்களிற்கு கனடாவில் இடமில்லை என பிரம்டன் முதல்வர் பட்ரிக் பிரவுண் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கனடாவில் ஸ்காப்ரோவில் மற்றுமொரு நினைவுத் தூபி அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (நி)

# மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி விளைவேலி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் (2025) எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் பூங்காவன உற்சவம் வரை இடம்பெறவுள்ளது.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 11 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

## நல்லூர் சிவன் கோவிலில் காயத்திரி மந்திரமஹாயக்ஞும்

(யாழ்ப்பாணம்)

குருபூரணை தினத்தை முன்னிட்டு சர்வலோக சுபீட்சத்திற்கான யக்ஞமான காயத்திரி மஹா மந்திர மஹா யக்ஞமானது இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி முதல் மதியம் 1.00 மணி வரை அருள்மிகு நல்லூர் சிவன் கோவிலில் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது. (ம-4,7)

## சுதுமலை அம்பாளுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இம்மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை பெருமஞ்சத் திருவிழாவும் 7ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை பெருஞ்சப்பறத் திருவிழாவும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு இரதோற்சவமும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3)

## பகிடிவதையை மறுத்த மாணவி மீது தாக்குதல்

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் புதிதாக பல்கலைக்கழகம் வரும் மாணவர்களை பகிடிவதை செய்ய வேண்டாம் எனத் தெரிவித்த சக பல்கலைக்கழக மாணவியின் கன்னத்தில் அறைந்த மாணவன் ஒருவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது குறித்த பல்கலைக்கழகத்தில் விவசாயபீடத்தில் 3 ஆம் ஆண்டில் கல்வி கற்று வரும் மாணவர்கள் புதிதாக பல்கலைக்கழகம் வரும் மாணவர்களை பகிடிவதை செய்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் [illegible] வாதத்தின்போது மாணவி ஒருவர் பகிடிவதை செய்ய வேண்டாம் எனத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சக மாணவன் ஒருவர் மாணவியை கன்னத்தில் தாக்கியதில் மாணவி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாணவியைத் தாக்கிய சகமாணவனை ஏறாவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மாணவனை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## வாகன விபத்து இருவர் படுகாயம்

### விளான் பகுதியில் சம்பவம்

இளவாலைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விளான் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விளான் - வல்லை வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற இவ்விபத்து தொடர்பில்மேலும் தெரியவருவதாவது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் சிறிய கப் ரக வாகனத்தில் மோதுண்டதிலேயே விபத்து சம்பவித்துள்ளதுடன் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காலில் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர். (ம-4.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் ...

தொடர்பில் நடவடிக்கை எடுக்காத யாழ். மாநகர சபையின் செயற்பாடு தொடர்பில் விசாரணைக்குழு அமைக்குமாறும் தமிழ்ச் சைவப்பேரவையினர் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களை நேற்று சந்தித்து மனுவைக் கையளித்தனர்.

முதல் கட்டமாக யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட நல்லூர் ஆலயச் சுற்றாடலில் மதுபான கேளிக்கை வர்த்தக நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படக் கூடாது எனவும் அதை சிவபுண்ணிய பிரதேசமாக மாநகர சபை வர்த்தமானி ஊடாக அறிவிப்பதற்கு ஏதுவான நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரினர்.

இளைய சமூகத்தை வழிப்படுத்தும் வகையில் அறநெறிக்கல்வியைக் கட்டாயமாக்குவதற்கான யோசனை தொடர்பிலும் தமிழ்ச் சைவப்பேரவையினர் சுட்டிக்காட்டினர். குறிப்பாக 14 வயதுக்கு உட்பட்டோருக்கான அனைத்து தனியார் கல்வி செயற்பாடுகளையும் வெள்ளி மாலையும், ஞாயிறு மதியம் வரையிலும் மூடுவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வர்த்தமானி மூலம் அறிவித்தல் விடுத்து நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரினர். அத்துடன் அறநெறிவகுப்புக்கு மாணவர்கள் செல்வதை உறுதிப்படுத்தி ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களின் அறநெறி வகுப்புக்கான வருகை மற்றும் செயற்பாடுகளை கட்டாயக் கல்வியின் ஒரு பகுதியாக இணைத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

சில பாடசாலைகளில் மாணவர்களை சைவச் சின்னங்கள் அணிந்து செல்வதை தடைவிதிக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என ஆதாரங்களுடன் தமிழ்ச் சைவப்பேரவையினர் ஆளுநரிடம் முறையிட்டனர்.

தமிழ்ச் சைவப் பேரவையினரின் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதாக ஆளுநர் இதன் போது குறிப்பிட்டார்.

(ம-4.7)


**மணமகள் தேவை**

1995, இந்து, உத்தரம், CIVIL ENGINEER
பூர்வீகம் - பருத்தித்துறை, வதியுமிடம் - AUSTRALIA
மணமகள் பதிவு இல: 11331.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-149)
www.EQMarriageService.com

**மணமகள் தேவை**

2001, இந்து, பூசம், CIVIL ENGINEER
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - AUSTRALIA
மணமகள் பதிவு இல: 11517.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-149)
www.EQMarriageService.com


## பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## தலைமை அலுவலக மேல் தளத்தில் தூண் அமைத்து கூரை அமைப்பதற்கான கூறுவிலை கோரல்

மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலக மேல்மாடி கட்டட வேலை (கூரை அமைத்தல்) 30X40 நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான கட்டட நிர்மாணத் தாரர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை கோரல் படிவங்களையும், வேலை தொடர்பான விபரங்களையும், A-**32 வீதி மட்டுவில் நாடு மேற்கு பூநகரி என்னும் முகவரியில் (பழைய பூநகரி பிரதேச செயலகம் எதிரே)** அமைந்துள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் 25.05.2025 தொடக்கம் 11.06.2025 ஆம் திகதிக் கிடையில் அலுவலக நாட்களில் காலை 09.00 தொடக்கம் மாலை 04.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

கூலிக்கான கூறு விலையினையும், கட்டடப் பொருட்கள் மற்றும் கூலி உள்ளடங்கிய கூறுவிலையினையும், தனித்தனியாக சமர்ப்பித்தல் வேண்டும். தலைவர் பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் A-**32 வீதி மட்டுவில் நாடு மேற்கு பூநகரி என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்**

மேலதிக விபரங்களுக்கு 0217912725, 0212284519 எனும் தொலைபேசி இலக்கங்களுடாக தொடர்பு கொள்ளவும்.

கூறுவிலைகளின் முடிவுகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பணிப்பாளர் சபைகொண்டுள்ளது.

**பொதுமுகாமையாளர்,**
**பூநகரி பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

(C-3027)


யாழ்ப்பாணம்
சர்வதேச புத்தகக் கண்காட்சி
2025
அனைவரும் வருக... பயன் பெறுக...
நம்பமுடியாத விலைக்கழிவு
பெறுமதிமிக்க, கிடைத்தற்கரிய எண்ணற்ற
புத்தக வகைகள்...
மருத்துவம், பொருளாதாரம்,
பொறியியல், வணிகம், கணிதம், கலை,
ஆன்மிகம், தத்துவம், நாவல்கள்,
தகவல் தொழில்நுட்பம்
இன்னும் பல, அரிய புத்தகங்கள்
விரையுங்கள்!
இன்று மட்டுமே!
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு...
மே | MAY
21 22 23 24 25
Silver Sponsors
ENTRANCE FREE
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்
50% வரையிலான விலைக்கழிவு
9.00 A.M - 8.00 P.M
Official TV Partner
Official News Paper வலம்புரி
Organized by


## அடுத்த ...

கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தொலைநோக்கு மற்றும் அனுபவம் இல்லாத ஒரு குழுவிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டால் என்ன நடக்கும் என்பதை எச்சரித்ததாகவும் தற்போது அதன் விளைவுகளை தாங்கள் காண்பதாகவும் நளின் பண்டார கூறியுள்ளார்.

(ம-4.7)

## சங்கு ...

கள் மூவரும் மூன்று டிப்பர்களுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-104)


அகில இலங்கை இளங்கோ கழகம்
புலமை ஒலி - 2025
சிலப்பதிகார விழா
இடம்
அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபம்
துன்னாலை, கரவெட்டி.
காலம் - 2025 மே
23, 24, 25 - மாலை 4 மணி

இன்றைய நிகழ்வுகள்
25.05.2025 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.00 மணி
திருமதி.வசந்தகுமாரி கதிரவேற்பிள்ளை அரங்கு

வரவேற்பு நடனம்
க.வைஷாலி, இ.கவினயா, கு.அஸ்ணவி, பி.பிரவீனா (நெறியாள்கை,திருமதி.குமணன் லோஷனா)
மங்கல விளக்கேற்றல்
திரு.திருமதி.சிவகுமாரசாமி கல்யாணி தம்பதிகள் (பிரதம நிறைவேற்றுப் பொறுப்பதிகாரி, வேலும் மயிலும் அறக்கட்டளை)
திரு.திருமதி.அருண்பிரசாந் உஷாந்தி தம்பதிகள்
கடவுள் வாழ்த்து
திரு.சி.பிரதீபன் (ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி)
கழகக்கீதம்
வரவேற்புரை
திரு. வே.சுரேஸ்வரன்
தலைமையுரை
திரு.ம.பிரதீபன் (அரச அதிபர், யாழ்ப்பாணம்)
தொடக்கவுரை
கௌரவ ச.சுகிர்தன் (முன்னாள் உறுப்பினர்,வடமாகாண சபை)
கௌரவிப்புரை
திரு.சி.பூபாலசிங்கம் (உதவிக்கல்விப்பணிப்பாளர், தமிழ், மன்னார்வலயம்)
நிறைவுரை
திரு.ந.சிவலிங்கம் (ஆலோசகர்,அகில இலங்கை இளங்கோ கழகம்)

நன்றியுரை
செல்வன் க.பிரசாந்
நிகழ்ச்சித் தொகுப்பு
திரு.வேல் நந்தகுமார்
திரு.ந.பிரதீபன் (உப அதிபர்,யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)
இளங்கோ கழக இளைஞர் அணியினர் வழங்கும்
சி.கிருஷ்ணாகரனின் நெறியாள்கையில்
தமிழ் அமுதம் (இசை விருந்து)
வழக்காடு மண்டபம்
"குற்றக் கூண்டில் சிலப்பதிகாரத் தலைவியர்"
இலக்கிய நீதிபதி
கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்
வாதிகள் :- பேராசிரியர்.ஸ்ரீ.பிரசாந்தன்
அ.வாசுதேவா
பிரதிவாதிகள் :- வலம்புரி ந.விஜயசுந்தரம்
த.கருணாகரன்
(c-3030)

விருதுபெறும் சான்றோர்
தங்கராசா வைகுந்தன் அவர்களால் நிறுவப்பட்ட சபாபதிப்பிள்ளை தங்கராசா ஞாபகார்த்த சமூகப் பணிக்கான உயர்விருது பெறுபவர்
திரு.வடிவேலு சந்திரசேகரம்
திருநாவுக்கரசு நகுலன் அவர்களால் நிறுவப்பட்ட கழக உறுப்பினர்களுக்கான சிலம்பிசை விருது பெறுபவர்கள்
த.குருபரன், க.வாணிமுகுந்தன்

விழா சிறப்புற வாழ்த்துவோர்
திருமதி.அ.கதிரவேற்பிள்ளை குடும்பம், இந்திரம்மன் கோயிலடி, துன்னாலை.
திரு.தங்கராசா வைகுந்தவாசன் மேலைப் புலோலி, தம்பசிட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயங்கி...

சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான மகாதேவன் திலகராசா (வயது-60) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுச் சனிக்கிழமை வல்வெட்டித்துறையில் உள்ள வங்கி ஒன்றுக்கு முன்னால் அவர் மயங்கிய நிலையில் காணப்பட்டதையடுத்து முச்சக்கர வண்டிச்சாரதி ஒருவர் அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தார். எனினும் அவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,4,60)

## நிமோனியாக்...

தினங்களாக உடல் சுகவீனமடைந்த நிலையில் இருந்துள்ளார்.

இந்நிலையில் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

நிமோனியாக் காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற் கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-4,7,104)

## பூநகரியில்...

கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியில் நாச்சிக்குடா சந்திக்கு அருகாமையில் உள்ள அரச காணிகளுக்குள் வியாழக்கிழமை (22) இரவு அனுமதியற்ற முறையில் தற்காலிகக் கடைகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் சில இரும்பினால் ஒட்டப்பட்ட கடைகளாகவும் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தகவல் அறிந்த பிரதேச சபைச் செயலாளர், வருமான வரி பரிசோதகர் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் குறித்த இடத்திற்குச் சென்று அனுமதியற்ற கடைகளை உடனடியாக அகற்ற வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர். அத்துடன் அது தொடர்பிலான அறிவித்தல் களையும் கடைகளில் ஒட்டியுள்ளனர்.

அந்நேரம் கும்பல் ஒன்று அரச உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததுடன், அவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டு, அவர்களைக் காணொளி எடுத்துள்ளார்கள். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,4,33)

## எந்தவொரு...

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுக்குள் குழப்பம் என்றும், பிரதமர் தலைமையிலான ஒரு குழு அரசில் இருந்து வெளியேறுகின்றது என்றும், அநுரவின் ஆட்சி கவிழப் போகின்றது என்றும் தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் கருத்துரைக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது ஜனநாயக நாடு. மக்கள் ஆணையை மீறி எவரும் நடக்க முடியாது. மக்களை ஏமாற்றி எவரும் அரசியல் பிழைப்பு நடத்த முடியாது. மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து அரசு நடக்க வேண்டும். இதை மீறி நடந்த, கடந்த ஆட்சியாளர்களுக்கு மக்கள் புகட்டிய பாடத்தை எவரும் மறக்கமாட்டார்கள்.

அந்தவகையில் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சி, மக்களின் அமோக ஆணையுடன் ஆட்சிக்கு வந்தது. மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நாம் செயற்படுகின்றோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகின்றோம்.

இந்நிலையில், குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க எதிரணியினர் பகல் கனவு காண்கின்றனர். பகல் கனவு ஒருபோதும் நனவாகாது என்பதை அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றார். (ம-7,4)

### மஹஜன சம்பத

திகதி 2025.05.24 | சீட்டிழுப்பு இலக்கம் 5839

ஆங்கில எழுத்து: L | வெற்றி இலக்கங்கள்: 0 0 5 3 2 3

அத சம்பத — ஆங்கில எழுத்து: L | வெற்றி இலக்கங்கள்: 5 3 2 3 | சீட்டிழுப்பு இலக்கம் 0414

தேசிய லொத்தர் சபை National Lotteries Board

### தன நிதானய

திகதி - 2025.05.24 | சீட்டிழுப்பு இலக்கம் - 1869

B 16 34 69 73 B

ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விசேட ஆங்கில எழுத்து

Double Chance இலக்கம் 21459

### மெகா பவர்

திகதி 24/05/2025 | சீட்டிழுப்பு இலக்கம் 2187

வெற்றி எழுத்து: M | சுப்பர் இலக்க: 02 | வெற்றி இலக்கங்கள்: 10 12 28 74

தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

### NLB ஜய JAYA

திகதி 2025.05.24 | சீட்டிழுப்பு இலக்கம் 107

ஆங்கில எழுத்து: W | வெற்றி இலக்கங்கள்: 0 9 1 0

தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4081 | சீட்டிழுப்பு திகதி 24.05.2025

ஆங்கில எழுத்து: L | வெற்றி இலக்கங்கள்: 39 68 72 73 | விசேட வெற்றி எழுத்து: L

தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 2025.05.24 | சீட்டிழுப்பு இலக்கம் 1148

வெற்றி இலக்கினம்: இடபம் | வெற்றி இலக்கங்கள்: 17 21 25 26 | விசேட இலக்கினம்: இடபம்

தன யோக இலக்கம் 03378 | நாளுக்கான விதி எண் 20

### உத்தியோகபூர்வ முடிவுகள் — அபிவிருத்தி லொத்தர் சபை (DLB)

**சுப்பிரி வாசனா / சம்பத** — 24.05.2025, வெற்றி வாரம் 547: ஆங்கில எழுத்து U, வெற்றி இலக்கம் 8 1 0 1 5 1; 82807; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,844,923.60

**சுப்பிரி வாசனா / சம்பத** — 23.05.2025, வெற்றி வாரம் 546: ஆங்கில எழுத்து G, வெற்றி இலக்கம் 3 7 1 3 7 9; 99202; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,778,688.00

**SUPER BALL** — சீட்டிழுப்பு வாரம் 2813, திகதி 2025.05.24, சனிக்கிழமை: 03 19 22 62 K; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,842,860.80

**SUPER BALL** — சீட்டிழுப்பு வாரம் 2812, திகதி 2025.05.23, வெள்ளிக்கிழமை: 05 66 74 80 O; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,631,315.20

**சனிதா** — திகதி 24.05.2025, வெற்றி வாரம் 4974: 29 46 47 64 F; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,774,613.20; செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 77980

**சனிதா** — திகதி 23.05.2025, வெற்றி வாரம் 4973: 38 43 55 75 P; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,653,176.80; செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 80187

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சசிரி** — வெற்றி வாரம் 689, சீட்டிழுப்பு திகதி 24.05.2025, சனிக்கிழமை: வெற்றி இலக்கங்கள் 26 47 50; வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

**சசிரி** — வெற்றி வாரம் 688, சீட்டிழுப்பு திகதி 23.05.2025, வெள்ளிக்கிழமை: வெற்றி இலக்கங்கள் 20 34 42; வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

**ராசி அதிர்ஷ்ட** — சீட்டிழுப்பு வாரம் 4525, திகதி 24.05.2025, சனிக்கிழமை: வெற்றி இலக்கங்கள் 01 09 33 37, மிதுனம்; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,928,786.00; 187825

**ராசி அதிர்ஷ்ட** — சீட்டிழுப்பு வாரம் 4524, திகதி 23.05.2025, வெள்ளிக்கிழமை: வெற்றி இலக்கங்கள் 17 25 38 44, சிம்மம்; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,690,418.80; 182510

**கப்ருக** — சீட்டிழுப்பு வாரம் 1989, 24.05.2025 சனிக்கிழமை: ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் Z 23 | 23 71 72 75; அடுத்த சுப்பர் ஜக்பொட்

**கப்ருக** — சீட்டிழுப்பு வாரம் 1988, 23.05.2025 வெள்ளிக்கிழமை: ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் V 35 | 21 43 70 74; அடுத்த சுப்பர் ஜக்பொட்

**அத கோடிபதி ADA KOTIPATHI** — சனிக்கிழமை, வெற்றி வாரம் 2639, சீட்டிழுப்பு திகதி 2025.05.24: 26 57 69 72 Q; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,982,416.80; ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 414620

**அத கோடிபதி ADA KOTIPATHI** — வெள்ளிக்கிழமை, வெற்றி வாரம் 2638, சீட்டிழுப்பு திகதி 2025.05.23: 34 37 46 58 X; அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,704,696.80; ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 798459

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலம் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பண்ணைக்கு கால்நடை தீவன புல், மக்காச்சோளம் சாகுபடிக்கு வெற்று நிலம் நீண்ட கால குத்தகைக்கு தேவை.

**076 287 8655**

Whatsapp only (1163)

## விற்பனைக்கு

1 1/4 பரப்பு காணி, வீடு (2 அறை) குடி தண்ணீர்க் கிணறு, Garage உடன் விற்பனைக்கு.

பாரதி lane கச்சேரியடி - 100m to A9 Road

**077 429 0613** (C-3037)

## Village Hotel Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு

யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)

நெல்லியடி → கொடிகாமம் ஊடாக

www.villagehotel.lk

**077 544 8503** (3992)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/- | Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237 (C-3035)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 255/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 243/= | |
| 1Kg கீரி சம்பா அரிசி | - 260/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 390/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 217/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 750ml NewVSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~

1Kg சவர்க்காரத் தூள் 280/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1166)

Happy Supermarket 0777 8080 30

## 9 ஆம் ஆண்டு நினைவுகள் 8 ஆம் ஆண்டு



பிறப்பு 12.05.1939 இறப்பு 10.08.2016

**வயிரமுத்து சிவலிங்கம்**

(ஓய்வுநிலை ஆசிரியர்)

திதி : அட்டமி



பிறப்பு 23.11.1950 இறப்பு 24.05.2017

**சிவலிங்கம் கனகமணி**

திதி : திரயோதசி

எத்தனை ஆண்டுகள் ஆனாலென்ன
இத்தரை மீதிலே உம்நினைவாய்
நித்தியம் நினைத்திருப்போம்
நித்தமும் கைதொழுவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குப்பிளான் தெற்கு, ஏழாலை. (4374)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## வேலையாட்கள் தேவை

ஆனைக்கோட்டை சந்திக்கு அருகாமையில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு புத்தக கட்டுனர் (Book binding) தேவை. அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது.(பெண்கள்)

788/782/787 காரைநகர், மாதகல் பஸ் வழித்தடத்தில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : **077 392 0797** (4371)

## காணி விற்பனைக்கு

K.K.S கடற்கரையோரமாக 11 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 100 அடி வீதி முகப்பைக் கொண்டது. ஹோட்டல், Restaurant கட்டுவதற்கு மிகச் சிறந்த இடம்.

Easy Real Estate

**076 742 4301, 075 710 9639** (4373)

## மணமகள் தேவை

1993, இந்து, றோஹினி, ENGINEER

பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - AUSTRALIA

மணமகன் பதிவு இல: 11599.

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை.

அழையுங்கள் 076 664 9401 (C-149)

www.EQMarriageService.com

## Dip in MS Office

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

நீங்கள் கணனித்துறையில் சாதிக்கும் துடிப்பு மிக்கவரா?

பாடசாலை, பல்கலை மாணவர்கள் மற்றும் அரச, தனியார் நிறுவன ஊழியர்களிற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை



விசேட விலைக்கட்டணம் ~~19 000/=~~ 10 000/= மட்டும்

உள்ளடக்கம்

Ms word, Excel, Access, power point,Internet, E-mail-Windows-(O/S) Typing

MS Office உடன் இலவசமாக கோடிங் கற்கையினைப் பயில அரிய வாய்ப்பு!

பெறுமதிமிக்க சான்றிதழ் 100% பயிற்சி வகுப்புக்கள் மூன்று மாதங்கள் மட்டும்

### மாணவர்களின் நலன்கருதி கீழ் வரும் இடங்களில் ஆரம்பமாகின்றது

- நல்லூரில் சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதி, நல்லூர் 077 077 9569
- நெல்லியடியில்–இல.601/1 கொடிகாமம் நெல்லியடி வீதி, நெல்லியடி 077 076 2817
- உடுப்பிட்டியில்–மலர்வாசா வல்வெட்டி வல்வெட்டித்துறை 077 076 3086
- வட்டுக்கோட்டையில்–சங்கரத்தை சந்தி வட்டுக்கோட்டை 077 076 3139
- தெல்லிப்பழையில் மடத்தடி வீதி, மாவிட்டபுரம் 077 076 1796
- சாகவச்சேரியில் – டச் வீதி, சாவகச்சேரி [பழனி ஆண்டவர் ஆலயம் அருகில்] 077 076 2788
- புத்தூரில் – பருத்தித்துறை வீதி, புத்தூர் [பிரதேச சபை அலுவலகம் எதிரில்] 077 076 2473
- சுன்னாகத்தில் இல.53/2 புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் 077 076 3368

My Dream Academy

Hot Line : 076 128 9485 / 077 076 3167 (C-3032)

## தேவை

சோலர் அமைப்பதற்குரிய CEB அனுமதி இருந்தால் அல்லது சோலர் அமைந்த இடம் விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

**077 082 1010** (4363)

## Brighten for your Bright Future...

### Brighten Group & Personal Class

### Science

- ★ Grade 6 - 11 வகுப்புக்கள் (Tamil Medium) நடைபெறுகிறது.
- ★ O/L Paper Class ஆரம்பமாகிறது.
- ★ அலகு ரீதியான பரீட்சைகள், தரம் 10 பாடப் பரப்பு முற்றாக மீட்கப்படும்.

By: N.Mahenthiran (Sp.Trd in Science)

Contact No : **076 343 2521**

- Temple Road, Jaffna.
- Manipay
- Aaladdy Junction, Udduvil.
- A9 Road, Nunavil, Chavakachcheri.

(4369)

## விநியோக பணியாளர் வெற்றிடம்

- வாகனத்தில் விநியோக பணியாளர் ஆண்கள். (40 வயதுக்கு மேற்பட்டவர்கள்)
  - > மின்சார உபகரணங்கள், மின்சாரப் பொருட்கள், நீர் குழாய்கள் விநியோகத்தர்கள்.
  - > முன் அனுபவம் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
  - > முன் அனுபவம் உடையவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும்.
- EPF/ ETF கொடுப்பனவு வழங்கப்படும்.
- நிரந்தர தொழில்.
- சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்.

ESS JEY ELECTRICALS

No.09, STANLEY ROAD, JAFFNA.

**021 222 2564/021 222 7430** (4372)

## கடை வாடகைக்கு

மானிப்பாய் வீதி, பள்ளிவாசலுக்கு முன் 20 அடி அகலமும் 35 அடி நீளமும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 617 6413** (4365)

## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு | குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்

நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு: **0777 301 669** (1160)

## சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

யாழ். நகரப் பகுதியில் இயங்கிவரும் சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

**077 985 8327**

**077 979 9855** (4352)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org